Registered with the Registrar of NewsPapers for India R. No. 62828 / 95

Date of Publication : 1st of Every month | Date of Posting : 5th & 6th of Every month

Regd. No. TN / CC (S) DN / 119 / 12-14

Licensed to Post without Prepayment WPP No. TN/PMG(CCR)/WPP-608/12-14

வேணு : 18 | ஜூன் 2013 | கானம் : 11



Published by S.Srinivasan on behalf of Guruji Sri Muralidhara Swamigal Mission, New No.2, Old No.24, Netaji Nagar, Jafferkhanpet, Chennai - 600083 and Printed by Mr.R.Kumaravel of Raj Thilak Printers (P) Ltd, 1/545A, Sivakasi Co-Op Society Industrial Estate, Sivakasi. Editor: S.Sridhar

Related Websites : www.namadwaar.org Email:contact@namadwaar.org

ஸ்ரீ ஹரி:

தனி பிரதி Rs.10/-

# மதுரமுரளி

MADHURA MURALI

ஆண்டு சந்தா ரூ120/-

மஹாரண்யம் ஸ்ரீஸ்ரீ முரளீதர ஸ்வாமிஜி அவர்கள் அருளாசியுடன்
வெளிவரும் தெய்வீக மாதப் பத்திரிக்கை



வேணு : 18 | ஜூன் 2013 | கானம் : 11

Delivered by India Post www.indiapost.gov.in

Please Renew/subscribe to MADHURAMURALI

காஞ்சி காமகோடி பீடாதிபதி ஸ்ரீஜயேந்திர சரஸ்வதி ஸ்வாமிகள் அவர்களின் அருளாசிகளுடன் VRNT வேத ரக்ஷண நிதி டிரஸ்ட் பரீக்ஷை சான்றிதழ்களை காஞ்சி சங்கர மடத்தில் ஸ்ரீசங்கர ஜயந்தி அன்று நமது சாந்தீபனி குருகுல வித்யார்த்திகள் பெற்று கொண்டனர்.





மதுரபுரி ஆஸ்ரமத்தில் ஸ்ரீஸ்வாமிஜி அவர்களுடன் தேர்ச்சி பெற்ற நமது சாந்தீபனி குருகுல வித்யார்த்திகள் (உடன் - பிரின்சிபால் ஸ்ரீபாலாஜி சர்மா)



மே 1 - கடலூர் ஸ்ரீகோதண்டராமர் கோவில் கும்பாபிஷேகத்தில்



மே 4 - குடியாத்தம் ஸ்ரீகருப்புலீஸ்வரர் கோவிலில் அப்பர் விழா



மே 19 - காரியாபட்டி ஸ்ரீகிருஷ்ணர் கோவில் கும்பாபிஷேகத்தில் ஸ்ரீஸ்வாமிஜி

Please Renew/subscribe to MADHURAMURALI




G.O.D. இந்தியா டிரஸ்டின் 3வது ஆண்டு விழா
பெங்களூர் மல்லேஸ்வரம் – ஏப்ரல் 27, 28, 2013



Please Renew/subscribe to MADHURAMURALI



மே 5 - 8, மாதுரி சகீ சமேத ஸ்ரீப்ரேமிக வரதன் சன்னதி சிட்னி - பாகவத துதிகள் பூர்ணிமாஜி சத்சங்கம்



வளைகுடா ஸ்ரீகிருஷ்ணர் கோவிலில் ராமுஜி முன்னிலையில் ஸ்ரீப்ரேமிக வரதனுக்கு பாகவத புறப்பாடு - ஏப்ரல் 26





மலேசிய நாமத்வாரில் சிறப்பு மஹாமந்திர கூட்டு பிரார்த்தனை - பாக்யநாதன்ஜி உரை - மே 24





Please Renew/subscribe to MADHURAMURALI

ஸ்ரீ ஹரி :

மஹாரண்யம் ஸ்ரீ ஸ்ரீ முரளீதர ஸ்வாமிஜி
அவர்கள் அருளாசியுடன்

# மதுரமுரளி

தெய்வீக மாதப் பத்திரிகை

வேணு: 18 | ஜூன் 2013 | கானம்: 11

**ஹரே ராம ஹரே ராம ராம ராம ஹரே ஹரே**
**ஹரே க்ருஷ்ண ஹரே க்ருஷ்ண க்ருஷ்ண க்ருஷ்ண ஹரே ஹரே**

## இந்த இதழில் ...


| | | | |
|---|---|---|---|
| மதுரமான மஹனீயர் - 207 | 03 | ஸ்வாமி ராமகிருஷ்ணானந்தர் | 18 |
| ஸ்ரீஸ்வாமிஜியின் பதில்கள் | 08 | 'காட்' இந்தியா ஆண்டு விழா | 26 |
| பாகவதபழம் – ஸ்கந்தம்2 – 1 | 10 | பாலகர்களுக்கு ஒரு கதை | 31 |
| ஒரு உரையாடல் | 13 | பிருந்தாவனமும் நந்தகுமாரனும் | 38 |
| ராகங்களின் ரகம் | 14 | மாலே மணிவண்ணா | 40 |
| தெய்வம், குரு, பிரதிஷ்டை | 16 | அப்பாலுக்கு அப்பால் | 42 |


கிருஷ்ணா! தாங்கள் எங்கு சென்றாலும், நானும் உடன் வருவேன். நீங்கள் அமர்ந்தால், நான் ஆசனம் போடுவேன். படுத்தால், அதற்கான படுக்கையை போடுவேன். சாப்பிடுவீர்களானால், சாதம் போடுவேன். விளையாடினால் கூட விளையாடுவேன். தாங்கள் நீராடினால் உடன் நீராடுவேன். பிரியமான உம்மை விட்டு எப்படி பிரிவேன்? நீங்கள் சாப்பிட்டதை சாப்பிடுவேன். தாங்கள் உடுத்தி களைந்த ஆடைகளையே, உடுத்தி கொள்வேன். எப்பொழுதும் உங்களுக்கு தாசனாக இருந்து, சேவை செய்து நாங்கள் மாயையை வெல்வோம்.

ஸ்ரீமத் பாகவதம் – ஏகாதச ஸ்கந்தம்
– உத்தவன் வாக்கியம்

Please Renew/subscribe to MADHURAMURALI

# ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்களின் கீர்த்தனம்

ராகம் : நாட்டை தாளம்: ஆதி

பல்லவி

கொண்டாடு பண்பாடு - இதுவே நம் பண்பாடு

ஸ்ரீநிவாஸனை (கொண்டாடு)

அனுபல்லவி

பலவித அன்னம் பழம் பக்ஷணங்களுடன்

பரிமள புஷ்ப வஸ்த்ர ஆபரணங்களுடன்

சரணம் (கொண்டாடு)

தினை தீபம் ஏற்றி புறப்பாடு கண்டருளி

கல்யாண உத்ஸவம் அடிக்கடி நடத்தி

வேத பாராயணம் முரளீ கீதத்துடன்

ஆழ்வார்கள் அருளிச்செயல்களுடன்தானே

(கொண்டாடு)

பின் அட்டை – ஏப்ரல் 29,30 – 2013 பெங்களூர் கல்கரே கிராம ஸ்ரீசுந்தர ஆஞ்சநேயர் பிரதிஷ்டா தின வைபவத்தின் பொழுது புறப்பாட்டில் உற்சவருடன் ஸ்ரீஸ்வாமிஜி





Please Renew/subscribe to MADHURAMURALI

# *மதுரமான மஹநீயர் - 207*

டாக்டர்.ஆ.பாக்யநாதன்

மஹாமந்திர கீர்த்தனத்துடன் கூடிய பிரார்த்தனை, விதியை கூட மாற்ற வல்லது என்று நம் ஸ்ரீஸ்வாமிஜி அவர்கள் அடிக்கடி கூறுவார்கள். மஹாமந்திரத்தின் இப்படிப்பட்ட மகத்துவத்தை நடைமுறை வாழ்க்கையிலேயே நிகழ்த்தி காட்ட வேண்டி, பல கூட்டு பிரார்த்தனைகளை தானே முன்னின்று நடத்துவார்கள் நம் குருநாதர். அவ்வப்பொழுது தன் சத்சங்கத்தை சேர்ந்த சீடர்களின் மூலமாக, இந்த கூட்டு பிரார்த்தனைகளை நடத்த, அவர் அருள்வதுமுண்டு. நமது சத்சங்கத்தில் ஒரு கொண்டாட்டம் என்றாலே. அது அகண்ட நாமகீர்த்தனமாகவும் பஜனையாகவும் கதாசிரவணமாகவும்தானே இருக்கும்? ஒரு சத்சங்க குழந்தையின் பிறந்த நாள் கூட அகண்ட நாமத்துடன் கொண்டாடப்படும் என்றால் காட் சத்சங்கம், நாமத்வார் ஆகியவற்றின் ஆண்டு விழாக்கள், அகண்டநாம கீர்த்தனத்துடன் கொண்டாடப்படும் என்பதை சொல்லவும் வேண்டுமோ?

அவ்வாறே அகண்ட நாமகீர்த்தனத்துடன் கூடிய அருப்புக்கோட்டை காட் சத்சங்கத்தின் இரண்டாவது ஆண்டு நிறைவு விழாவில், ஸ்ரீஸ்வாமிஜி அவர்களின் அருளாசிகளுடன் ராமுஜி கலந்து கொண்டார். மே 11 முதல் 17 வரை இது நடைபெற்றது. மே மாதம் என்றாலே நமக்கு நினைவுக்கு வருவது அக்னி நக்ஷத்திர வெய்யில். அருப்புக்கோட்டையிலோ வெய்யிலுக்கு பஞ்சமே இல்லை. அதிலும் அக்னி நக்ஷத்திரம் வேறு! கேட்கவே தேவையில்லை. வெய்யில் சுட்டெரித்தது. இந்த சமயத்தில்தான், அருப்புக்கோட்டை கோதண்டராமர் கோவிலில் ஆண்டு விழா ஏற்பாடு செய்யப்பட்டு இருந்தது.

ஏழு நாட்களும் காலை 6 மணி முதல் மாலை 6வரை அகண்டமாய் மஹாமந்திர நாமகீர்த்தனமும், மாலை ராமுஜியின் பாகவத பிரவசனமும், ஏற்பாடாகி இருந்தது. இதை



Please Renew/subscribe to MADHURAMURALI

அருப்புக்கோட்டை "காட்" சத்சங்க ஒருங்கிணைப்பாளர் திரு.கண்ணன் மிகவும் விமரிசையாக ஏற்பாடு செய்திருந்தார். வகை வகையான பூக்களாகட்டும், ஆசையுடன் செய்யப்பட்ட அன்னதானமாகட்டும், மனமுவந்து மஹாமந்திரம் சொல்ல கூடிய பக்த கோடிகளின் பாங்குதான் ஆகட்டும், பாகவத கதையை ஆசையுடன் கேட்கக்கூடிய பக்தர்களின் இஷ்டம்தான் ஆகட்டும் எல்லாம் மிக மிக மனதை கொள்ளை கொள்வதாக இருந்தது. தினமும் ராமுஜி பிரவசனத்துக்கு வரும்பொழுதும் இருநூறு பக்தர்களுக்கு குறையாமல், அன்பர்களின் நாம கோஷம் கேட்டவாறே இருக்கும். மஹாமந்திர கீர்த்தனம் பூர்த்தியாகும் சமயம் 6.30 மணிக்கு பிரியாவிடை உற்சவம் போல்தான் இருக்கும். அவ்வளவு நாம நிஷ்டை, நாமருசி இந்த ஊர் மக்களுக்கு.

நமது குருநாதரின் அருளுரைகளை கேட்டே இந்த ஊர் மக்களுக்கு அவ்வளவு நாம ருசி ஏற்பட்டு இருந்தது. தினமும் பாகவத கதையில் ராமுஜி பாகவதத்தின் மேன்மையையும், சத்சங்கத்தின் அவசியத்தையும், குருநாதரின் மகத்துவத்தையும், நாம மஹிமையையும் மிக அழகாக எடுத்துரைத்தார்.

13ஆம் தேதி அக்ஷய திருதியை அன்று, நாமமும் பாகவதமும் அக்ஷயமாகவே நடந்தது. அருப்புக்கோட்டை பக்தர்களுக்கு, லக்ஷ்மியின் கடாக்ஷம் அக்ஷயமாய் கிடைக்க ஒரு விசேஷ கூட்டு பிரார்த்தனை ஏற்பாடு செய்யப்பட்டு இருந்தது. அன்று நாமம் சொன்னால் விசேஷம் என்று அறிந்து, 350க்கும் மேற்பட்ட அன்பர்கள் அகண்ட நாமத்தில் கலந்து கொண்டனர். மாலையில் எல்லோருக்கும் விசேஷ கூட்டு பிரார்த்தனையின் முடிவில், ப்ரேமிகவரத டாகுர்ஜி மற்றும் குருநாதரின் அருளாசிகளுடன் கூடிய ரூபாய் நாணயமும் குங்கும பிரசாதமும் வழங்கப்பட்டது. நமது தெய்வீக வாழ்க்கைக்கு பொருளாதார பற்றாக்குறை தடையாக இருக்க கூடாது என்பதற்காக, பிராத்தனை செய்து, அனைவருக்கும் நாணயம் அளிக்கப்பட்டது.

காமாக்ஷி எனும் ஒரு பெண்மணி, அருப்புக்கோட்டை காட் சத்சங்கத்தில் விடாது நாமம் சொல்லி வருபவர்களில் ஒருவர். தினமும் நாம சப்தாஹத்திற்கு சுத்தமான குடிநீரை தானே எடுத்து



Please Renew/subscribe to MADHURAMURALI

வந்து வைப்பார். டாகுர்ஜிக்கும், குருநாதருக்கும் தினமும் தானே பிரசாதத்தை பக்தியுடன் கொண்டு வந்து அளிப்பார். அவரது குடும்பம் ஒன்றும் வசதியான குடும்பம் என்று சொல்ல முடியாது 25 வருடங்களாக மிகவும் அன்போடு, அவர் ஒரு வயதான மூதாட்டிக்கு சேவை செய்து வந்து கொண்டிருந்தார். அந்த மூதாட்டி ஒரு மாதம் முன்பாகத்தான் இறைவனடி அடைந்தார். அக்ஷய திருதியை அன்று விசேஷ பூஜை நடக்க இருப்பதை கேள்விப்பட்டு, அதில் கலந்து கொள்ள ஆசைப்பட்டார் காமாக்ஷி. நாமம் சொல்லி வந்த அவரால், ஏனோ அன்று மாலை பூஜையில் கலந்து கொள்ள முடியாத சூழ்நிலை ஏற்பட்டு விட்டது. அடடா! பூஜையில் கலந்து கொள்ள முடியவில்லையே என்று வருத்தப்பட்டார் அவர். ஆனால் திரு.கண்ணனே அவரது வீடு தேடி சென்று அக்ஷய திருதியை பிரார்த்தனை பிரசாதத்தையும் அவர் கைகளில் கொடுத்து, "இது குருநாதர் அருளால் நமக்கு எல்லாம் கிடைத்திருக்கிறது. மிகுந்த நன்மை தரும். பெற்று கொள்ளுங்கள்" என்று தந்தார். உடனே அதை தனது கண்களில் ஒற்றிக்கொண்டு, தனது இஷ்ட தெய்வங்களின் மத்தியில், பூஜை அறையில் வைத்து வணங்கினார் காமாக்ஷி.

அக்ஷய திருதியைக்கு மறுநாள், அவர் மாலை நேரம் விளக்கேற்றி வைத்து, கண்ணனை மனதார தொழுது வணங்கினார். தனக்கு அருள வேண்டும் என்று கண்ணனை மிகவும் வேண்டி கேட்டுக்கொண்டார். கதவு தட்டும் சப்தம் அப்பொழுது கேட்டது. உடனே பிரார்த்தனையிலிருந்து விடுபட்டு கதவை திறந்தார். பார்த்தால், தான் 25 வருடம் சேவை செய்த அம்மூதாட்டியின் மகன்கள் வாசலில் நின்று கொண்டு இருந்தனர். அவர்களை கண்டு மகிழ்ந்தார் காமாக்ஷி. அந்த மூதாட்டியின் மகன்கள், ஒரு துணிப்பையை காமாக்ஷியின் கைகளில் கொடுத்து "எங்கள் அம்மாவுக்கு சேவை செய்த தங்களுக்கு எங்களின் நன்றியை தெரிவிக்கும் வகையிலும் அம்மாவின் விருப்பத்தை நிறைவேற்றுவதற்காகவும் இந்த பையில் ஒரு லக்ஷ ரூபாய் வைத்து இருக்கிறோம். இது உங்களுக்காக" என்று சொல்லி அந்த பையை அவரிடம் கொடுத்து, அவரை வணங்கி, வந்தபடியே சென்று விட்டனர்.



Please Renew/subscribe to MADHURAMURALI

காமாக்ஷிக்கு இப்பொழுது என்ன செய்வதென்றே புரியவில்லை. அவர் கண்களில் ஆனந்த நீர் பெருகியது. கண்ணனிடம் பிரார்த்தனை செய்ய செய்யவே, உடனே அருளி விடுகிறானே! அவன் அருளை நினைத்து, பிரார்த்தனையின் மகிமையை நினைத்து அவர் நெகிழ்ந்து போனார். உடனே அவர் திரு.கண்ணன் அவர்களுக்கு இந்த செய்தியை தெரிவித்து, தன் மகிழ்ச்சியையும் பகிர்ந்து கொண்டார். திரு.கண்ணன் அதை அன்று மாலையே பிரவசனத்தின்பொழுது, எல்லோரிடமும் பகிர்ந்து கொண்டார். எல்லோரும் இந்த ஆச்சரியத்தை கேட்டு பரவசமுற்றனர்.

பகவான் கண்ணனுக்கு நாவற் பழம் தந்தாளாம் ஒரு பாட்டி. நாவற்பழம் தந்தவளை வெறும் கையுடன் கண்ணன் அனுப்பவில்லை. நவரத்தினங்களை தந்து அனுப்பினான். அந்த கதையைத்தான் அன்று ராமுஜி பாகவத பிரவசனத்தில் சொன்னார். அந்த கதை முடிந்தவுடன், திரு.கண்ணன் வந்து "கண்ணன் அன்று நாவற்பழம் தந்த பாட்டிக்கு நவரத்தினம் தந்தான். கண்ணன் நாமம் சொல்லி கண்ணனுக்கு சேவை செய்யும் காமாக்ஷி அவர்களுக்கு கண்ணன் கை நிறைய செல்வம் அளித்து சந்தோஷம் தந்து இருக்கிறான்" என்றவுடன், எல்லோரும் உடனே தங்களை அறியாது கரகோஷம் போட, "சத்குருநாத மஹராஜ் கீ ஜெய்" என்ற ஜயகோஷமும் கேட்டது. பலர் இது கண்டு மெய் சிலிர்த்தனர். சிலருக்கு அழுகையே வந்து விட்டது. ராமுஜி அதை கண்டு சந்தோஷப்பட்டார். பாகவத பிரவசனம் தொடர்ந்து நடந்தது. அக்னி நக்ஷத்திரத்தின் வெயிலையும் வெப்பத்தையும் வேர்வையையும் பொருட்படுத்தாமல், எல்லோரும் பாகவத கதையை மிகவும் சிரத்தையுடனும் ஆர்வத்துடனும் கேட்டு ரசித்தனர்.

12ஆம் தேதி மாலை ராமுஜி தலைமையில், அருப்புக்கோட்டையில் ஒரு அழகான புறப்பாடு நடந்தது. கிருஷ்ணரும் குருநாதரும் சுமார் 200 அன்பர்கள் கலந்து கொள்ள மஹாமந்திர நாமகீர்த்தனத்துடன் புறப்பாட்டில் வந்தது கண்கொள்ளா காட்சியாக இருந்தது. மிக ஒழுங்காகவும் அழகாகவும் இப்புறப்பாடு நடந்தது. பிற்பாடு பாகவத உபன்யாசம். இந்த உபன்யாசத்தை தவறாது கேட்டு வந்திருந்த



Please Renew/subscribe to MADHURAMURALI

ஒரு பெண்மணியின் மகன் 15 வருடமாக காணவில்லையாம். பாகவதம் கேட்டவாறே, தன் மகன் கிடைக்க வேண்டும் என்று குருநாதர் திருவுருவப்படம் முன் நின்று பிரார்த்தனை அவர் செய்திருக்கிறார். 19ஆம் தேதி ஸ்ரீஸ்வாமிஜி அவர்கள் அருப்புக்கோட்டை அருகே காரியாபட்டியில் ஒரு கிருஷ்ணர் கோவில் கும்பாபிஷேகத்தில் கலந்து கொண்டார்கள். அங்கு ஸ்ரீஸ்வாமிஜி அவர்கள், ஆண்டாள் திருக்கல்யாணம் மற்றும் நாம மகிமை குறித்து அருளுரை வழங்கினார்கள். அப்பொழுது அருப்புக்கோட்டை பாகவத சப்தாஹத்தில் தன் மகன் கிடைக்க வேண்டும் என்று பிரார்த்தனை செய்த பெண்மணி ராமுஜியை அணுகி "என் பிரார்த்தனை பலித்தது. மகன் கிடைத்து விட்டான்" என்று சொல்லி விட்டு, வேகமாக, ஸ்ரீஸ்வாமிஜியின் அருளுரை கேட்க வந்திருந்த 2000அன்பர்களின் மத்தியில், அவர் மறைந்தே போய் விட்டார்!

"நாம் செய்யக்கூடிய எந்த ஒரு தெய்வீக விஷயமும் பகவானுக்கு மகிழ்வு தந்தால், பூர்த்தி அன்று பகவான் தன் மகிழ்வை நிச்சயம் வெளிப்படுத்துவான் என்று பொதுவாக குருநாதர் சொல்வார்கள். சப்தாஹ பூர்த்தி தினமான 17ஆம் தேதியும் வந்தது. ஏழு நாட்கள் இடைவிடாமல் நடந்த அகண்ட நாமகீர்த்தனத்திற்கும் பாகவத பிரவசனத்திற்கும் பூர்த்தி தினம். அன்று பிரவசனம் நடந்து கொண்டிருக்கையிலேயே வானிலை மாறி குளிர் காற்று வீசியது. பிரவசனம் முடிந்து வந்து பார்க்கையில்தான், எல்லோருக்கும் சத்தமே இல்லாமல் தூறல் அழகாக போட்டிருக்கிறது என்று தெரிந்தது. சில்லென மனதை தொட்டது அது. அன்று சரியான மழை பொழிந்து தள்ளியது. அருப்புக்கோட்டை குளிர்ந்து போனது.

உலக தாபமாகிய அக்னியை, கண்ணனின் நாமம் தணிக்க வல்லது என்று மஹாப்ரபு சொன்னார் அல்லவா? இந்த பாகவத நாம சப்தாஹத்தினால் பகவான் குளிர்ந்து இருக்கிறான். நாம சப்தாஹம், கண்ணனின் இதயத்தையும் குருநாதரின் இதயத்தையும் குளிர்வித்தது. பிரார்த்தனை நிறைவேறிய பக்தர்களின் மனமும் குளிர்ந்தன. மஹாமந்திரம் பாடிய தலமான அருப்புக்கோட்டையும் வான்மழையால் குளிர்ந்தே விட்டது!



Please Renew/subscribe to MADHURAMURALI



# பக்தர்களின் கேள்விகளுக்கு ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்களின் பதில்கள்

கேள்வி: சத்சங்கத்தில் ஒரே கூட்டமாக உள்ளது. நான் வெகு தொலைவில் இருந்து வர வேண்டியுள்ளது. சில சமயம், நான், பழக தெரியாமல் சண்டை கூட போட்டு விடுகின்றேன். அதனால், வீட்டில் இருந்து கொண்டே, நாமகீர்த்தனம் தனியாக செய்யலாம் என நினைக்கின்றேன். நீங்கள் என்ன சொல்கின்றீர்கள்?

பதில்: சத்சங்கத்தில் உங்களுக்கு சில குறைகள் இருக்கலாம். ஆனால் ஒன்று கவனிக்க வேண்டும். சத்சங்கத்திற்கு வந்து விட்டால் போதும். நாம் நாமா சொல்கின்றோம். சொல்லாவிட்டாலும் பிறர் சொல்லும் நாமாவை நாம் கேட்கின்றோம்; கதை கேட்கின்றோம்; பாராயணம் கேட்கின்றோம்; அல்லது பாராயணம் செய்கின்றோம்; பகவானை பார்த்து கொண்டும், அவனை பற்றி பேசிக் கொண்டுமே இருக்கின்றோம். நிரந்தரமாக சத்சங்கம் நடக்கும் இடம் இருக்குமானால், நாம் ஒன்றுமே செய்யா விட்டாலும் கூட, அந்த இடத்தில் தங்கியுள்ள தெய்வீகமான சூழ்நிலையே, நமது மனதை, உன்னத நிலைக்கு உயர்த்தும் சக்தி கொண்டது.

நாம் தனிமையில் இருந்தால் சில நாட்கள் நாமம், தியானம் என்று இருப்போம். நாட்கள் ஆக ஆக டி.வி. பார்ப்போம். அரசியல் பேசுவோம். சொந்தக்காரர்கள் வீட்டுக்கு போவோம். ஸ்போர்ட்ஸ் பார்ப்போம். தூங்குவோம். **TOUR** போவோம். தனிமையில் இருந்தாலும் கூட, வீணாகாமல் நாமம் சொல்கின்ற நிலை வந்தாலும் கூட, சத்சங்கத்தை விடக்கூடாது என்றால், அந்த நிலை வராதபொழுது அப்படி செய்யவே கூடாது.

கேள்வி: மனது தூய்மையாய் இருந்தால்தான், தியானம் சித்திக்குமா?

பதில்: தியானம் சித்திப்பதற்கு, மனது தூய்மையாக இருப்பது



Please Renew/subscribe to MADHURAMURALI

என்பது மிகவும் முக்கியமான ஒன்றுதான். ஆனால், அதே சமயத்தில் சின்ன சின்ன ஆசைகளை கூட அடக்க முடியாமல், அதை அனுபவிக்க வேண்டும் என்று சபலப்படும் மனதிலும் தியானம் சித்திக்காது.

காற்றில் ஒரு கயிறு ஆடிக் கொண்டிருக்கின்றது. அதில் ஒரு மணியை கட்ட வேண்டும். அந்த கயிற்றை ஆடாமல் ஒரு கையால் பிடித்து கொண்டால், அந்த மணியை எளிதாக கட்டி விடலாம். ஆடுகின்ற மனதில், கண்ணனின் உருவத்தை நிலை நிறுத்த முடியாதபொழுது, பிராணாயாம பலத்தால் மனதை நிறுத்தி, அதில் கண்ணனை அமர வைத்து தியானம் செய்யலாம்.

– மஹாரண்யம் ஸ்ரீஸ்ரீமுரளீதர ஸ்வாமிஜி




75 & 77, KG Marina Bay, Santhome High Road, Santhome, Chennai - 600 004
Phone: 044 - 42144662, 43033313, 43033326
contact@buddiesinfotech.com www.buddiesinfotech.com





Please Renew/subscribe to MADHURAMURALI



# பாகவத பழம்

**ஸ்கந்தம் 2, அத்யாயம் 1**

–ஸ்ரீஸ்வாமிஜி

(1)



ஸ்ரீமத் பாகவதம் முதல் ஸ்கந்தம் முதல் அத்தியாயத்தில், சௌனகாதி மஹரிஷிகள் ஸூதரை பார்த்து ஆறு கேள்விகள் கேட்டார்கள். அவர்கள் கேட்ட அத்தனை கேள்விகளுக்கும் பதில் ஸ்ரீமத் பாகவதத்தில் இருப்பதால், அதைச் சொல்ல ஆரம்பித்தார் ஸூதர். சௌனகாதி மஹரிஷிகள், வேள்வியின் ஓய்வு நேரத்தில் புராணம் கேட்க வேண்டும் என்ற ஒரே காரணத்திற்காகத்தான் கேட்க ஆரம்பித்தார்கள். ஆனால், திரும்பத் திரும்ப அவர்கள் ஸூதரை ஆர்வத்துடன் கேள்வி கேட்பதைப் பார்த்தால், புராணத்தின் ஓய்வில்தான் வேள்வி நடந்திருக்குமோ என்று தோன்றுகின்றது. கேள்விகளாலேயே இப்பொழுது அவர்கள் வேள்வி நடைபெறுகின்றது.

தினம் தினம் சாலையில் செல்லும்பொழுது, ஆயிரம் விபத்துக்களை நேரில் பார்க்கின்றோம், எவ்வளவோ மரணங்களைப் பார்க்கின்றோம். அங்கம் பூரணமாக இல்லாமல் துயரப்படுபவர்களைப் பார்க்கின்றோம். புத்தி சரியில்லாதவர்களைப் பார்க்கின்றோம். மூப்பினால் துன்பப்படுபவர்களைப் பார்க்கின்றோம். இவ்வளவையும் பார்த்தும், கேட்டும், பழகியும்கூட நமக்கு துளிகூட வைராக்கியம் வருவதே இல்லை.

மருத்துவமனையில் வேலை செய்பவர்கள், ஒவ்வொரு நொடியும் இவைகளையே நேரில் பார்த்துக் கொண்டிருக்கின்றார்கள். அவர்களுக்கும் வைராக்கியம் வருவது இல்லை. உடலை அறுத்து, கிழித்து வைத்தியம் பார்ப்பவருக்கும் வைராக்கியம் வருவதில்லை. மயானத்தில் இருப்பவர், தினம் தினம் அங்கு வரும் பிணங்களை எரித்துக் கொண்டிருக்கின்றார். அவருக்கும் வைராக்கியம் வருவதில்லை. வைராக்கியம்



Please Renew/subscribe to MADHURAMURALI

வரவேண்டும் என்றால், ஒருவனுக்கு தனிப்பட்ட முறையில் துயரம் வரவேண்டும். தனிப்பட்ட முறையில் துயரம் வருபவர்கள் எல்லோரும் வைராக்கியத்தை அடைந்து, பகவத் பக்திக்கு வருவதில்லை.

மாறாக மதுபானம், தற்கொலை என்று போனவர்கள்தான் அதிகம். தனிப்பட்ட முறையில் துக்கமும் வரவேண்டும். பகவானுடைய அருளும் வேண்டும். அப்படி இருந்தால்தான், அது வைராக்கியத்திற்கும் பகவத் பக்திக்கும் காரணம் ஆகின்றது. பரீக்ஷித்திற்கு பிறக்கும் பொழுதே கிருஷ்ண கிருபை கிடைத்துவிட்டது. தற்பொழுது அவனுக்கு ரிஷி புத்திரன் மூலமாக சாபமும் வந்துவிட்டது. இரண்டும் சேர்ந்து அவனுக்கு வைராக்கியத்தை உண்டாக்கிவிட்டது.

முதலாவது ஸ்கந்தம் பூர்த்தியில் பத்தொன்பதாவது அத்தியாயத்தில், கங்கைக் கரைக்கு ஓடி வந்த பரீக்ஷித், பகவானுடைய கிருபையால், அங்கு வந்த சுகப்பிரும்மத்திடம் ஆறு கேள்விகளைக் கேட்கின்றான். முதல் ஸ்கந்தத்தின் ஆரம்பத்திலும் ஆறு கேள்விகள், முடிவிலும் ஆறு கேள்விகள் என்று வருவது இங்கு கவனிக்கத்தக்கது.

பரீக்ஷித் இந்த சாபத்தை நினைத்து மகிழ்ச்சி அடைந்தான். மகிழ்ச்சிக்கு என்ன காரணம்? இப்படி ஒரு சாபம் மட்டும் எனக்கு சம்பவிக்காமல் இருந்தால், நான் மீண்டும் மீண்டும் இந்த அரசாட்சி, மனைவி, குழந்தைகள் என்றுதான் உழன்று கொண்டு இருந்திருப்பேன். இந்த சாபத்தினாலாவது, எனக்கு மனது பகவானிடம் திரும்பியதே என்று அவன் நினைத்ததே அவனுடைய மகிழ்ச்சிக்குக் காரணம் ஆகும்.

மேலும், வாழ்க்கையில் ஏற்படும் துக்கங்களில் இருந்தும், நல்லதையே எடுத்துக்கொள்ளவேண்டும் என்பதை எவ்வளவு அழகாக நமக்கு பாகவதம் காட்டிக் கொடுக்கின்றது. ஜே. கிருஷ்ணமூர்த்தி அவர்களிடம் ஒருவர், "நான் வாழ்க்கையில் எப்படி நடந்துகொள்ள வேண்டும்?'' என்று கேட்டார். அதற்கு ஜே. கிருஷ்ணமூர்த்தி, "இன்று இரவு உனக்கு மரணம் சம்பவிக்கப் போவதாக நினைத்துக்கொள். அப்படியானால் இன்று நீ எப்படி



Please Renew/subscribe to MADHURAMURALI

நடந்துகொள்வாயோ அப்படி தினமும் நடந்து கொள்' என்று கூறினார். அதுபோல்தான் பரீக்ஷித்தும் கங்கைக் கரைக்கு ஓடி வந்து விட்டான். எந்த குறையுமில்லாது, பெரும் செல்வத்தில் திளைக்கும் ஒருவர், ஒரு அல்ப பொருளைக் கூட கொடுக்கத் தயங்குவார்கள். அப்படியிருக்க, மஹாபுருஷர்களோ ஒரு நொடியில், எல்லாவற்றையும் உதறித் தள்ளிவிடுவது ஆச்சரியம் அல்லவோ!

பிராணன் போகும்பொழுது, கழுத்தில் உள்ள சங்கிலியை விடாமல் படித்துக்கொண்டு உயிர் விடுபவர்களும் உண்டு. வீட்டின் அலமாரியில் வைத்துவிட்டு வந்த பத்து ரூபாய், அதே இடத்தில் பத்திரமாக இருக்குமா என்ற கவலையுடன் உயிர் விடுபவர்களும் உண்டு. அப்படியிருக்க ஒரு ராஜ்ஜியத்தையே துச்சமாக நினைத்து உதறிவிட்டு கிளம்பினான் என்றால் இதற்கு, அவன் மேல் தெய்வம் காட்டிய கருணையே காரணம்.

புண்ணிய க்ஷேத்திரங்களில், தெய்வத்தின் சாந்நித்தியம் நிறைந்து இருக்கும். பல தீர்த்தங்கள் இருக்கும். இவைகள் இருப்பதினாலேயே, பல சாதுக்களும் மஹான்களும் அங்கு வந்து போய் கொண்டிருப்பார்கள் அல்லது நிரந்தரமாக தங்கி விடுபவர்களும் உண்டு. அப்படிப்பட்ட மஹான்களில் யாராவது ஒருவருடைய தரிசனமாவது கிடைக்காமலா போய்விடும் என்ற ஆர்வத்துடன் ஓடோடி வந்தான் பரீக்ஷித்து.

பகவானுடைய கிருபையால் அங்கு வந்து சேர்ந்த சுகப்பரும்மத்தை சேவித்தான். அவரைச் சேவித்து, "மனிதர்களாக பிறந்தவர்களால் அவசியம் கேட்க வேண்டியது எது? அவசியம் ஜபம் செய்ய வேண்டியது எது? அவன் செய்ய வேண்டிய செயல்கள் என்ன? அவன் மனதினால் எவைகளை நினைக்க வேண்டும்? அவன் பஜனம் செய்ய வேண்டியது என்ன? மற்றும் எதைச் செய்வதால், மேலே செய்யக்கூடியவைகள் எல்லாம் பலனளிக்காமல் போய்விடுமோ அவைகளைச் சொல்லி அருள வேண்டும்" என்று சரியான ஆறு கேள்விகளைக் கேட்டு முடித்தான்.

(கனியும்)



Please Renew/subscribe to MADHURAMURALI

# குருநாதருடன் ஒரு உரையாடல்

ஸ்ரீஸ்வாமிஜியை தரிசனம் செய்ய வந்திருந்த ஒரு பக்தருக்கும் ஸ்ரீஸ்வாமிஜி அவர்களுக்கும் இடையே நடந்த ஒரு உரையாடல்.

பக்தர்: ஒரு உத்தம குருவை அடைந்து விட்டால் போதும். அவருடைய கிருபையினாலேயே முக்தி அடைந்து விடலாம் என்கின்றார்களே. அது உண்மையா?

ஸ்ரீஸ்வாமிஜி: ஆம்! உண்மைதான்!

பக்தர்: அப்படியானால், ஒரு உத்தம குருவை அடைந்த சீடன் முக்தி அடைந்து விடுவானா? என்னால் இதை ஏற்றுக்கொள்ள முடியவில்லையே? எந்த நம்பிக்கையின் அடிப்படையில் இதை நாம் கூற முடியும்?

ஸ்ரீஸ்வாமிஜி: நீங்கள் இப்பொழுது எதற்காக இந்தியாவிற்கு வந்துள்ளீர்கள்?

பக்தர்: சண்டி ஹோமம் ஒன்றில் கலந்து கொள்ள வந்திருக்கின்றேன்.

ஸ்ரீஸ்வாமிஜி: அந்த சண்டி ஹோமத்தில் என்ன செய்வார்கள்?

பக்தர்: அக்னியில் நிறைய நெய், புடவை மற்றும் மங்கள திரவியங்களை எல்லாம் போட்டு அழகாக செய்வார்கள்.

ஸ்ரீஸ்வாமிஜி: அக்னியில் போட்டால் அவைகள் எல்லாம் வீணாகி விடுமே?

பக்தர்:அது எப்படி ஸ்வாமிஜி? நீங்களே இப்படி சொன்னால் எப்படி? எல்லாம் தேவியைத்தானே சென்றடைகின்றது!

பக்தர்: யார் பார்த்தார்கள்?

பக்தர்: யாரும் பார்க்கவில்லை. ஒரு நம்பிக்கைதான்.

ஸ்ரீஸ்வாமிஜி: யார் மேல் நம்பிக்கை?

பக்தர்: அதை நமக்கு சொல்லி கொடுத்த மஹான்களின் வாக்கியத்தில் நம்பிக்கை.

ஸ்ரீஸ்வாமிஜி: அப்படி சொல்லுங்கள். அதுபோல்தான் உத்தம குருவின் அருளுக்கு பாத்திரமான சீடன் முக்தி அடைவான் என்று பல சாஸ்திரங்களில் தீர்மானமாக சொல்லி உள்ளது. அதனால், இது தனிப்பட்டவர் மேல் உள்ள நம்பிக்கை அல்ல. நம்முடைய புனிதமான சாஸ்திரங்களின் மேல் உள்ள நம்பிக்கை!



Please Renew/subscribe to MADHURAMURALI

# ராகங்களின் ரகம்!

–குள்ள ஹரி

ஸ்ரீஸ்வாமிஜியிடம் ஒரு பக்தர், "மஹாமந்திரத்தை ஒரே ராகத்தில்தான் சொல்ல வேண்டுமா அல்லது பல ராகத்தில் சொல்ல வேண்டுமா" என்று கேட்டார். அதற்கு ஸ்ரீஸ்வாமிஜி சிரித்து கொண்டே, "பல ராகத்தில் சொல்பவர்களும் உண்டு, பல ரகமும் உண்டு" என்றார். அதற்கு வந்தவர், "நாமா சொல்பவர்களில் பல ரகமா? வியப்பாக உள்ளதே" என்றார்.

அதற்கு ஸ்ரீஸ்வாமிஜி சிரித்து கொண்டே, "நாம் நிறைய நாமம் சொல்கின்றோம் என்று பிறருக்கு தெரிய வேண்டும் என்று சொல்பவர்கள் ஒரு ரகம். நாமம் இவ்வளவு மணி சொல்ல வேண்டும் என்று கடிகாரத்தை பார்த்து கொண்டே நாமம் சொல்பவர்கள் ஒரு ரகம். நாமம் சொல்லுமிடத்தில், தெரியாத்தனமாக மாட்டி கொண்டு விட்டோம், அதனால் நாமம் சொல்லி விடுவோம் என்று நாமம் சொல்பவர்கள் ஒரு ரகம். நாமத்தின் அருமை தெரியாமல், பிறர் சொல்கின்றார்கள் அதனால் நாமும் சொல்வோம் என்று சொல்பவர்கள் ஒரு ரகம். பிறரை நாமம் சொல்ல சொல்லி விட்டு தான் சொல்லாமல் இருப்பவர்கள் ஒரு ரகம். குரு, நாமம் சொல்லும்படி சொல்லி இருக்கின்றார், அதனால் நாமம் சொல்வோம் என்று சொல்பவர்கள் ஒரு ரகம். நாமம் சொன்னால் பாவம் போகும் என்று நினைத்து சொல்பவர்கள் ஒரு ரகம். நாமம் சொன்னால் நினைத்தது நடக்கும் என்று சொல்பவர்கள் ஒரு ரகம். துக்கம் வரக்கூடாது என்று நினைத்து நாமம் சொல்பவர்கள் ஒரு ரகம்". "நாம் பிறர் காதில் விழும்படி நாமா சொன்னால் அவர்களும் கரையேறுவார்களே என்று பிறர் காதில் விழும்படி நாமம் சொல்பவர்கள் ஒரு ரகம். நாமம் சொன்னால் புண்ணியம் வரும் என்று நினைத்து நாமம் சொல்பவர்கள் ஒரு ரகம். நாமம் சொன்னால் பகவானை பார்க்கலாம் என்று நினைத்து நாமம் சொல்பவர்கள் ஒரு ரகம். நாமம் சொன்னால் முக்தி அடையலாம் என்று நினைத்து நாமம் சொல்பவர்கள் ஒரு ரகம். நாமம்



Please Renew/subscribe to MADHURAMURALI

சொன்னால் மன அமைதி கிடைக்கும் என்று நினைத்து நாமம் சொல்பவர்கள் ஒரு ரகம். நாம் தியானம், யோகம் எல்லாம் செய்யவில்லையே நாமம்தானே சொல்கின்றோம் என்று நினைத்து நாமம் சொல்பவர்கள் ஒரு ரகம். நமக்கு மனித பிறவியும் கொடுத்து நாமம் சொல்ல வேண்டும் என்ற புத்தியும் கொடுத்த, இறைவனின் அருளை நினைத்து கொண்டே, நாமம் சொல்பவர்கள் ஒரு புறம். நாமம் இனிமையாக உள்ளது என்பதினால் சொல்பவர்கள் ஒரு ரகம். நாமத்தை நாமத்திற் காகவே சொல்பவர்கள் ஒரு ரகம்" என்று ஸ்ரீஸ்வாமிஜி ஒரு குட்டி பிரசங்கமே செய்து விட்டார்.

அதை அப்படியே எழுதி இருக்கின்றேன்.

## வேத பரீக்ஷையில் தேர்வு

காஞ்சி காமகோடி பீடத்தின் வேத ரக்ஷண நிதி டிரஸ்டினால் **(VRNT)** நடத்த பெறும் யஜுர் வேத, சாமவேத பரீக்ஷைகளில் நமது சாந்தீபனி குருகுலத்தை சேர்ந்த 18 வித்யார்த்திகள் தேர்வு பெற்றனர். ஸ்ரீ சங்கர ஜெயந்தி அன்று காஞ்சி சங்கர மடத்தில் ஸ்ரீஸ்ரீ ஆச்சார்யாளின் அருளாசியுடன் பூர்த்தி சான்றிதழ்களை பெற்று கொண்டனர்.

நமது மதுரபுரி ஆஸ்ரம பாடசாலாவிலிருந்து திருவேங்கடம், யதீந்த்ரன், வித்யாசங்கர், ஸ்வாமிநாதன், காமசாஸ்திரி, பாலசுப்ரமணியன், ராமசுப்ரமணியன், வம்ஸீகிருஷ்ணன், அர்ஜுன், ஆதித்யா, கண்ணன், ரவிதேஜா, ரமணகணேஷ் ஆகிய வித்யார்த்திகள் யஜுர் வேத கிரம பரீக்ஷையிலும், ஆஷிஷ் பாண்டே, சிவம்குமார் த்விவேதி ஆகியோர் சாமவேத பூர்வ பரீக்ஷையிலும், ஸ்ரீரங்கம் பாடசாலாவிலிருந்து ஷடக்ஷரன், நரசிம்மன், தத்தாத்ரேயன் ஆகியோர் யஜுர்வேத கனம் பரீக்ஷையிலும் தேர்ச்சி பெற்றனர். யஜுர்வேத கனம் பரீக்ஷையில் ஷடக்ஷரன் 97 மதிப்பெண்கள் பெற்று முதலிடம் பெற்றார். தேர்ச்சி பெற்ற வித்யார்த்திகள் மதுரபுரி ஆஸ்ரமத்தில், ஸ்ரீஸ்வாமிஜி அவர்களின் ஆசியும் அருளும் பெற்றனர்.



Please Renew/subscribe to MADHURAMURALI

# அனுபவம் 5
# – தெய்வம், குரு

–ஸ்ரீபத்மபாதர்

மூன்று விதமான பிரதிஷ்டைகள் உண்டு. ஒருவர் மிகுந்த ஈடுபாடாக பகவானிடம் பிரார்த்தனை, அன்பு, நம்பிக்கை கலந்து பக்தி செய்வதினாலேயே ஓரிடத்தில் பகவானின் சான்னித்தியம் வந்து விடும். நாமதேவர், கண்ணப்பர் போன்று பக்தியில் விசுவாஸம் இருந்தால் இது நடக்கின்றது. இது பக்திப் பிரதிஷ்டை என்று பெயர்.

சைவ, வைணவ ஆகம விதிகளின்படி, அமையும் கோவில்களில் ஸ்வாமி சான்னித்யம் இருக்கும். இதற்கு ஆகம பிரதிஷ்டை என்று பெயர்.

வேத மந்திரங்களைக் கொண்டு, ஒரு மூர்த்தியின் சான்னித்தியம் வரவழைத்து, அந்த மூர்த்திக்கு கோயிலமைத்தால், அதற்கு வைதீக பிரதிஷ்டை என்று பெயர்.

அதுபோல் மூன்றுவித ஸ்வாமி உண்டு. ஒரு ஸ்வாமியிடம் எந்தவிதமான உலக பிரார்த்தனையை வைத்தாலும் அது பலிக்கும். அவர் வீர தேவதை எனப்படுவார். வேங்கடமுடையான் அப்படிப்பட்டவர்தான்.

ஒரு ஸ்வாமிக்கு அலங்காரம், பூஜை, புறப்பாடு, உற்சவம், கதை என்று ஏதாவது இருந்தால்தான் சந்தோஷப்படுவார். அவர் போக தேவதை எனப்படுவார். ரங்கநாதர் அப்படிப்பட்டவர்.

மற்றுமொருவர் இருக்கின்றார். அவருக்கு தபஸ், முக்திக்கான பிரார்த்தனை, யோகம், ஜபம், தியானம் இதில்தான் ஈடுபாடு அதிகம். அவருக்கு யோக தேவதை என்று பெயர். பத்ரி நாராயணன் அப்படிப்பட்டவர்.



Please Renew/subscribe to MADHURAMURALI

தெய்வங்களில் மூன்று விதம் போல, மஹான்களையும் மூவகைப்படுத்தலாம். ஒரு சில மஹான்களை பகவான் உலகில் வாழும் ஜனங்களின் கஷ்டங்களை தீர்ப்பதற்காக அனுப்புகின்றான். அவர்கள் வீர தேவதை போன்றவர்கள்.

ஒரு சில மஹான்கள் எப்பொழுதும் பூஜை, ஸ்வாமிக்கு புறப்பாடு, விதம் விதமான நிவேதனம், தினம் ஒரு உற்சவம் போல் ஸ்வாமியை கொண்டாடுவர். கதை சொல்லி மகிழ்வர். தங்களிடம் வருவோரையும் அதில் ஈடுபடுத்துவர். அத்தகைய மஹான்கள் போக தேவதை போன்றவர்கள்.

ஒரு சில மஹான்கள் எப்பொழுதும், ‘‘ஜபம் செய், பகவானை தியானம் பண்ணு, ஆத்ம விசாரம் பயில், மோக்ஷத்தை அடை" என்று உபதேசித்து, வருவோரை அதில் ஊக்குவித்து வருவர். இந்த மஹான்கள் யோக தேவதை போன்றவர்கள்.

Our Humble Pranams to the Lotus feet of His Holiness Sri Sri Muralidhara Swamiji

VAPSSKY
absolute motion machine

ADVT

Our products

Globe Tipper | Unit Converter | Smart Alarm Pro | DRACO, The Dragon




Our Solutions

- Mobile Games
- Mobile Data Security Systems
- Multimedia content Exchange
- Mobile Applications
- Mobile Enhancement Utilities
- 3D Multiplayer Games

For any Business Related Enquiry email us at contact@vapssky.com



Please Renew/subscribe to MADHURAMURALI

# ஸ்வாமி ராமகிருஷ்ணானந்தர் - 5

சென்னை ராமகிருஷ்ணா மடம் - ராமகிருஷ்ணானந்தரின் 150வது ஜெயந்தி விழா ஜூலை 15, 2012 அன்று ஸ்ரீஸ்வாமிஜி ஆற்றிய உரை

---

நமது இதிஹாச புராணங்களில் சொல்லப்பட்டிருக்கிற விஷயங்கள் சத்தியமானவை என்பதை, ராமகிருஷ்ணர் நிரூபித்தார். இதிஹாச புராணங்கள், சகுண வழிபாடு, பக்திபாவனைகள், வேதாந்த விசாரம், யோகம் என்று மட்டுமில்லாமல் நம் நாட்டில் தொன்றுதொட்டு இருக்கும் சிறுசிறு சம்பிரதாயங்கள் கூட ராமகிருஷ்ணரால் நிரூபணம் செய்யப்பட்டவையே.

பாகவதத்தில் வேனன் என்கிற ராஜாவை பற்றிய சரித்திரம் வருகிறது. அவன் துஷ்டத்தனமாக அரசாட்சி செய்தான். அவனுக்கு மகரிஷிகள், "நீ இப்படி இருக்கக்கூடாது" என்று உபதேசம் செய்தனர். அவன் கேட்கவில்லை. அவனை வதம் செய்து விட்டனர். அவனிடமிருந்தே ஒரு ராஜ வம்சத்தை உற்பத்தி செய்ய வேண்டும் என்று அவனது தொடைகளை கடைந்தனர். அவனது இடது தொடையில் இருந்து கட்டை, குட்டையான ஒரு உருவம் வெளிப்படுகிறது. இது வேனனுடைய பாவம் என்று அதை துரத்தி விடுகின்றனர். வலது துடையில் இருந்து, பகவானின் அம்சமாய் பிருது மஹாராஜா அவதாரம் செய்கிறார்.

ராமகிருஷ்ணரும் பவதாரிணியை உபாசனை செய்கையில், அவருக்கு உடலில் தாங்க முடியாத வேதனையும் எரிச்சலும் உண்டாகிறது. ஒருமுறை அவர் தியானத்தில் தன் சரீரத்தை பார்க்கிறார். அவரது இடது தொடையிலிருந்து, ஒரு கருப்பு உருவம் வெளியே கிளம்பி செல்வதை பார்க்கிறார். அது கிளம்பி சென்றதிலிருந்து, அவரது உடலில் இருந்த வேதனையும் எரிச்சலும் மறைந்து விட்டது. புராணத்தில் சொல்லி இருப்பதை இப்படி உண்மையாய் அவர் அனுபவித்தார்.



Please Renew/subscribe to MADHURAMURALI

காசிக்கு ராமகிருஷ்ணர் செல்கிறார். காசி முழுக்கவே, ஜோதி மயமாக அவருக்கு காட்சி அளிக்கிறது. அவர் காசியை விட்டு பல்லக்கில் மூன்று மைல் தொலைவு சென்றுதான், மல, மூத்திர விசர்ஜனங்களை கூட செய்து வருகிறார். ஒருமுறை அவர் மணிகர்ணிகாகாட்டில் போட்டில் பிரயாணம் செய்கிறார். அங்கு இறக்கும் ஒவ்வொரு ஜீவனின் காதிலும், பரமேஸ்வரன் வலது காதில் ராம நாமத்தை சொல்லி, கரையேற்றுவதை பிரத்யக்ஷமாக பார்க்கிறார். இதை கோவில் பண்டாக்கள் கேட்டு, ஆச்சரியம் அடைகின்றனர். ஏனெனில், காசி க்ஷேத்ர மஹாத்மியத்தில் பரமேஸ்வரன் இப்படி காசியில் மரிக்கும் ஜீவன்களை உத்தாரணம் செய்வது, மணிகர்ணிகா காட்டில் நடப்பதாகத்தான் சொல்லப்பட்டு இருக்கிறது.

அவர் பக்தி பாவனையில் மூழ்கி இருக்கையில், யாராவது உடம்பில் காயங்களுடன் அவரை தொட்டால், அவருக்கு அந்த பாவசமாதி கலைந்து விடும். ஆகம சாஸ்திரம், உடம்பில் காயங்களுடன் ஸ்வாமியை பூஜை செய்யலாகாது என்று சொல்கிறது. அதைத்தான் ராமகிருஷ்ணரின் மேற்கண்ட சம்பவம் நிரூபிக்கிறது.

ஸ்வாமிக்கு நிவேதனம் செய்த பின்னரே, பிரசாதத்தை எடுத்து கொள்ளவேண்டும். ஒருவர் லாலா கடையில் ராமகிருஷ்ணருக்கு என்று ஜிலேபி வாங்கி வந்தார். அதை வழியில் ஒருவருக்கு கொடுக்க நேர்ந்தது. நேரில் ராமகிருஷ்ணரிடம் அதை சமர்ப்பிக்கையில், ராமகிருஷ்ணரால் அதை ஏற்க முடியவில்லை. அந்த லாலா கடையில் பலர் இனிப்புகள் வாங்கி சென்று கொண்டுதான் இருக்கிறார்கள். ஆனால் ராமகிருஷ்ணருக்கு என்று ஒதுக்கி வைத்த பின், அதை மற்றொருவர் எடுத்துக்கொண்டால், அதை அவரால் ஏற்று கொள்ள முடியாமல் போய் விடும்.

ஸ்வாமிக்கு என்று எடுத்து வைத்ததை, நிவேதனத்திற்கு முன் ஒருவரும் உண்ணுதல் கூடாது. இது உண்மை என்பதைத்தான் ராமகிருஷ்ணரின் வாழ்வில் நடந்த இந்த சம்பவம் காண்பிக்கிறது.



Please Renew/subscribe to MADHURAMURALI

அவரிடம் இருந்த குரு பக்தியும் ஆச்சரியமானது. தாரக் மஹாராஜ் எனும் சிவானந்தர், ராமகிருஷ்ணரின் சீடர். ராமகிருஷ்ணர் தன்னிடம் இருக்கும் சீடர்களிடம், சிறு சிறு வேலைகள் எதையாவது சொல்வார். "கால் பிடித்து விடு, போர்வையை எடு, அந்த புத்தகத்தை எடு, நீர் கொண்டு வா, அங்கு இருக்கும் இனிப்பை எடு" இப்படி ஏதாவது சொல்வார். ஆனால் ஒருமுறை கூட, அவர், சிவானந்தரிடம், எந்த வேலையையும் செய்ய சொல்ல மாட்டார். இது சிவானந்தருக்கு மிகுந்த மனவேதனையை தந்தது. ராமகிருஷ்ணரால் உலோகபாத்திரத்தை உபயோகிக்க முடியாது என்பதால், ஒருமுறை தாரக் மஹாராஜ், பாத்திரத்தில் நீர் கொண்டு சென்றார். அதை பார்த்த ராமகிருஷ்ணர், "உன்னை யார் எடுத்து வர சொன்னது?" என்றார். உடனே சிவானந்தர் அழுதார். "ஏன் நான் உங்களுக்கு எந்த கைங்கரியமும் செய்ய கூடாதா?" என்று சொல்லி வருத்தப்பட்டு அழுதார். உடனே ராமகிருஷ்ணர், "அப்படி இல்லை. எனக்கு உடலில் ஒருமுறை கடுமையான எரிச்சல் இருந்தது. உன் தந்தையிடம் சென்றேன். அவர் மந்திரித்து ஒரு தாயத்து கட்டினார். உடனே உடலில் இருந்த வேதனை அகன்றது. அவர் எனக்கு ஒரு குருஸ்தானம். குருபுத்ரனிடம் இருந்து வேலை எதையும் பெற்று கொள்ள கூடாது என்பதினால் உன்னை வேலை வாங்க மறுக்கிறேன்" என்றார்.

(தொடரும்)

ஒரு தந்தைக்கு அன்பார்ந்த ஒரு மகன் இருந்தான். அந்த பையனின் மிகப்பெரிய ஆசை டாக்டராவதுதான். அதனால் அவன் தந்தை, அது சம்பந்தமான படிப்புகளை எங்கு கற்று தருகின்றனரோ, அதில் தேர்ச்சி பெற வேண்டி, அங்கெல்லாம் அவனை அனுப்பினார். அவனுக்கு வணிகத்தில் ஆசை இருந்திருக்குமானால், அது சம்பந்தமான இடங்களுக்கு அவனை அனுப்பி இருப்பாரல்லவா? இது லாஜிக்படி(LOGIC) சரிதானே? அதுபோலவே, இறைவனும் முக்தி பெற ஆசைப்படும் ஒருவனை சத்சங்கத்தில் சேர்த்து அவனை பக்குவப்படுத்துகிறார்.

– மஹாரண்யம் ஸ்ரீ ஸ்ரீ முரளீதர ஸ்வாமிஜி



Please Renew/subscribe to MADHURAMURALI

# Our Humble Pranams to the Lotus feet of His Holiness Sri Sri Muralidhara Swamiji



**Guru–ram Consulting Private Ltd**



Please Renew/subscribe to MADHURAMURALI

# G.O.D. இந்தியா டிரஸ்டின் 3வது ஆண்டு விழா

குளோபல் ஆர்கனைசேஷன் ஃபார் டிவினிடி இந்தியா டிரஸ்டின் 3வது ஆண்டு விழா, பெங்களூர் மல்லேஸ்வரத்தில் விஷால் மஹாலில் ஏப்ரல் 27, 28 தேதிகளில் மிகவும் சிறப்பாக நடைபெற்றது. இந்தியாவின் பல பகுதிகளிலிருந்தும் சுமார் 150க்கும் மேற்பட்ட நாமத்வார் மற்றும் காட் சத்சங்க ஒருங்கிணைப்பாளர்கள், சத்சங்க அன்பர்கள் மற்றும் அவர்களின் குடும்ப உறுப்பினர்கள் பெரும் திரளாக வந்து உற்சாகமாகக் கலந்து கொண்டனர். இதே சமயத்தில் பெங்களூரில் அருள்பாலிக்கும் ஸ்ரீ சுந்தர ஆஞ்சநேயர் கோயிலின் ஆண்டு விழாவில், பக்தவிஜயம் உபன்யாசம் நிகழ்த்தி கொண்டிருந்த ஸ்ரீ ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்கள், இவ்வாண்டு விழாவில் பங்கேற்று நகரசங்கீர்த்தனம் மற்றும் சொற்பொழிவு ஆற்றியது மேலும் சிறப்பு சேர்ப்பதாக அமைந்திருந்தது. விழா ஏற்பாடுகளை திரு.சங்கரநாராயணன் மற்றும் பெங்களூர் சத்சங்க அன்பர்கள் மிக அழகாக ஏற்பாடு செய்திருந்தனர்.

அறக்கட்டளை ஸ்தாபகர் திரு.சத்தியநாராயணன் அவர்கள் விழா செயல்திட்டத்தினை அறிவித்து, அனைத்து நிகழ்ச்சிகளையும் மிக அழகாக ஒருங்கிணைத்தார். இந்தியாவைப் பற்றிய ஒரு சிறு கண்ணோட்டத்தையும், கடந்த வருட செயல்பாடுகளையும் திரு.பாலாஜி ராமச்சந்திரன் வழங்கினார். டாக்டர் ஆ.பாக்கியநாதன் அவர்கள் நமது ஆஸ்ரமம், பாடசாலை, ஸ்தாபனங்கள் மற்றும் பிற அனைத்து அறக்கட்டளைகளின் குறிக்கோள், இதுவரை செயல்படுத்தப்பட்டவை குறித்து அனைவரும் புரிந்து கொள்ளும்படி மிக அழகாக உரையாற்றினார். காட் சத்சங்கங்களை நடத்தி செல்வதற்கான வழிமுறைகள், ஒருங்கிணைப்பாளர்கள் மற்றும் நாமம் சொல்ல வரும் அன்பர்களுக்கான கட்டுப்பாட்டு விதிகள் மற்றும் வழிகாட்டு நெறிகளினை, மிகவும் தெளிவாக திரு.வெங்கடேஸ்வரன் குருமூர்த்தி அவர்கள் விளக்கினார். நமது ஆஸ்ரமத்தில் அமைந்துள்ள ஸ்ரீகல்யாண ஸ்ரீநிவாசப் பெருமாள் கோயில் பற்றிய விபரங்கள், கோயில் வைபவங்கள், பகவானின் லீலைகள் மற்றும்



Please Renew/subscribe to MADHURAMURALI

அப்பகுதியைச் சுற்றி நடைபெறும் பிரச்சாரப் பணி விபரங்களை பம்மல் திரு.பாலாஜி அவர்கள் பகிர்ந்து கொண்டார். தன்னை முழுமையாகப் பிரச்சாரப்பணியில் ஈடுபடுத்திக் கொண்ட திரு.முரளி அவர்கள், பிரச்சாரத்தின் போதும் சொற்-பொழிவுகளின்போதும், நாம் எப்படி நடந்து கொள்ளவேண்டும் மற்றும் எப்படிப் பேசிப் பழகவேண்டும் என்ற வழிமுறைகளை அனைவரும் புரிந்துகொள்ளும் விதமாக எடுத்துரைத்தார். செல்வி.ப்ரியங்கா தன்னுடைய இந்தோனேசிய சத்சங்க அனுபவத்தைப் பகிர்ந்து கொண்டார்.

நாமத்வார் சத்சங்க ஒருங்கிணைப்பாளர்கள் தங்களுடைய கடந்த வருட செயல்பாடுகளை சுருக்கமாக பகிர்ந்து கொண்டனர். குழந்தைகளுக்கான பயிற்சி வகுப்பான கோபகுடீரத்தின் ஒருங்கிணைப்பாளர் திருமதி.சுதா தியாகராஜன் அவர்கள், கோபகுடீரம் பற்றி மிக அழகான விரிவுரை வழங்கினார். பல்வேறு பகுதிகளை சார்ந்த, கோபகுடீர குழந்தைகளின் நிகழ்ச்சியுடன் விழாவின் முதல் நாள் நிறைவடைந்தது.

மறுநாள் 28 காலை 6:30மணிக்கு, ஸ்ரீஸ்வாமிஜி அவர்களின் முன்னிலையில் சுமார் 200 அன்பர்கள் பங்கேற்ற நகரசங்கீர்த்தனம், அருகிலுள்ள வேங்கடேச பெருமாள் கோயிலில் தொடங்கி அரங்கம் வரை இடம்பெற்றது. ஸ்ரீஸ்வாமிஜி அவர்கள், அன்பர்கள் மேலும் சிறப்பாக நாமப்பணி செய்யும் விதமாக அருளுரையும், ஆசியும் வழங்கினார்கள். பெங்களூர் சத்சங்கக் குழந்தைகளின் கலை நிகழ்ச்சிகளைத் தொடர்ந்து, திரு.குமார் அவர்கள் பெங்களூர் கேந்திராவின் செயல்பாடுகள் குறித்து பகிர்ந்து கொண்டார். பெங்களூர் கோபகுடீர நிகழ்ச்சிகள் மற்றும் செயல்பாடுகள் குறித்து, திருமதி.புவனாகுமார் அவர்கள், மிக தெளிவாக பகிர்ந்து கொண்டார். திரு.குருமூர்த்தி அவர்கள், ஸ்ரீசுந்தர ஆஞ்சநேயர் கோயிலைப் பற்றிய ஒரு தொகுப்புரையை வழங்கினார். திரு.சேகர் அவர்கள், பெங்களூர் நாமப் பணிகளையும், செல்வன்.விக்னேஷ் உலகெங்கிலும் உள்ள நமது அமைப்பின் செயல்பாட்டு விபரங்களையும் பகிர்ந்து கொண்டனர்.

பின்னர், முதல் நாள் நடைபெற்ற புராநவா-வினா



Please Renew/subscribe to MADHURAMURALI

விடைப்போட்டியின் இறுதிச் சுற்று நடைபெற்றது. நமது மதுரமுரளி சந்தா, வெளியீடுகளின் விற்பனை ஆகியவற்றில் முதன்மைக்கான சுழற்கோப்பை, பெரியகுளம் திரு.கிருஷ்ணகுமாருக்கு வழங்கப்பட்டது. நிகழ்ச்சியினை அழகாக ஏற்பாடு செய்த அன்பர்களை, அண்ணாநகர் திரு.பலராமன் அவர்களும் மும்பை திருமதி.சரஸ்வதி அவர்களும் கௌரவப்படுத்தினர். பெங்களூரை சேர்ந்த அன்பர்கள் திரு.விஜய்சுப்ரமணியம், திரு.ஸ்ரீதர், திரு.முரளீதரன், திரு.வெங்கடெசன், ஸ்ரீமதி லஷ்மிமுரளீதரன், ஸ்ரீமதி பத்மாவெங்கடேசன், ஸ்ரீமதி ரஜினிஸ்ரீதர், ஸ்ரீமதி ரூபாகுருமூர்த்தி, ஸ்ரீமதி சந்திராசங்கர் ஆகியோரும் மற்றும் பல பெங்களூர் காட் சத்சங்க அன்பர்களும், இந்த ஆண்டு விழாவில் சிறப்பான பணியாற்றினர்.

## மலேசியாவில் சத்சங்க செய்திகள்

ஸ்ரீஸ்வாமிஜி அவர்களின் அருளாணைப்படி மலேசியா மற்றும் சிங்கப்பூர் சத்சங்கங்களில் கலந்து கொள்வதற்காக பாக்யநாதன்ஜி மலேசியா சென்றிருந்தார். மே 24 அன்று மலேசிய நாமத்வாரில் டாக்டர் பாக்யநாதன்ஜி முன்னிலையில், ஒரு மஹாமந்திர கூட்டு பிரார்த்தனை நடைபெற்றது. மலேசியாவில் பிரபலமான குயில் பத்திரிக்கை ஆசிரியர் Dato ஜோதிநாதன் அவர்கள், இதில் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டார். பத்திரிக்கை வாயிலாக மாணவர்க்கும் இளைய சமுதாயத்தினருக்கும் நற்சிந்தனைகளை சென்றடைய செய்வதில், மலேசிய நாமத்வார் காட் சத்சங்கமும் அவருடன் இணைந்து செயல்பட்டு வருகிறது. இச்சமயம் மலேசியாவில் கடுமையான வெய்யில். எல்லோரும் அதன் கடுமையை பற்றியே பேசி கொண்டிருக்க, கூட்டு பிரார்த்தனை நடந்த அன்று பகவான் தான் மகிழ்ந்ததற்கு அடையாளமாக மழை கோலாலம்பூரில் கொட்டி தள்ளி விட்டது! மலேசிய சத்சங்க அன்பர்கள் ஏற்பாடு செய்த இக்கூட்டு பிரார்த்தனையில் திரளான அன்பர்கள் பங்கு கொண்டு, குருவருளும் திருவருளும் பெற்று சென்றனர்.



Please Renew/subscribe to MADHURAMURALI

## சனாதனப்புதிர் பகுதி 52 - கேள்விகள் - ஆத்ரேயன்

1. பாண்டவர்கள் யுத்தத்தை தவிர்க்க கௌரவர்களிடம் கேட்ட ஐந்து கிராமங்களின் பெயர் என்ன?
2. சுக்ராசாரியாரால் சபிக்கப்பட்ட யாதி கிழத்தன்மையை அடைகிறான். தனது ஐந்து மகன்களை யாராவது கிழத்தன்மையை ஏற்று யௌவனத்தை அளிக்க கேட்கிறான். யௌவனத்தை கொடுத்தது யார்?
3. ஜரத்காரு என்ற ரிஷி யாரை மணந்தார்? அவரது குழந்தையின் பெயர் என்ன?
4. ஜனமேஜயனின் சர்ப்பயாகத்தை நிறுத்தி ஸர்ப்பங்களை காப்பாற்றியது யார்?
5. மஹாபாரதத்தில் சிறந்த குரு தக்ஷிணையாக கருதப்படுவது எது?
6. துரோணர் எப்பொழுது பக்ஷபாதமாக நடந்து கொண்டார்?
7. திலோத்தமை யாரால் சிருஷ்டிக்கப்பட்டாள்? யாரை அழிக்க?
8. துரியோதனன் எப்பொழுது தற்கொலை செய்ய தீர்மானித்தான்? அவனை காப்பாற்றியது யார்?
9. காந்தாரி கிருஷ்ணரை எப்படி சபித்தாள்?
10. சிரகாரின்- இவர் யார்? ஏன் இந்த பெயர் வந்தது?

ஒருநாள் கனவில் ப்ரேமிகவரதன் வந்தான். ப்ரேமிக வரதனை கண்டவுடன் நான் அடைந்த மகிழ்ச்சியை வர்ணிக்கவே முடியாது. நான் அவனுடைய திருவடிகளை பற்றி கொண்டு, "எனக்கு கிருபை செய்" என்று அழுதேன். ப்ரேமிக வரதன், "ஏன் இப்படி ஆர்ப்பாட்டம் செய்கின்றாய்? கிருபை என்றால் என்ன? நான் இப்பொழுது என்ன செய்ய வேண்டும் என்கின்றாய்" என்றான். நானும் விடாமல் கிருபை செய்ய வேண்டுமென்றேன். அதற்கு உடனே ப்ரேமிக வரதன், "என் கிருபை இல்லாமல் உன் நாவில் என் நாமம் வருமா? என் நாமம் உன் நாவில் வருவதே என் கிருபையால்தான். நிரந்தரமாய் நீ நாமம் சொல்லி வருவதுதான் என் கிருபையை நிரந்தரமாய் தக்க வைத்து கொள்வதற்கு வழி" என்று கூறி மறைந்தான். – குள்ள ஹரி



Please Renew/subscribe to MADHURAMURALI

## சனாதனப்புதிர் பகுதி 52 - விடைகள்

**- ஆத்ரேயன்**

1. திலப்ரஸ்தம், இந்திரப்ரஸ்தம், பாகப்ரஸ்தம், க்ஷேனிப்ரஸ்தம், பாணிப்ரஸ்தம் என்ற ஐந்து கிராமங்கள்.
2. யயாதி - சர்மிஷ்டாவிற்கு பிறந்த மூன்றாவது மகனான புரு.
3. வாஸுகியின் சகோதரியான ஜரத்காருவை மணந்தார். ஆஸ்திகன் - குழந்தையின் பெயர்.
4. ஜரத்காருவின் புத்திரனான ஆஸ்திகன்.
5. ஹிரண்யதனுசின் புதல்வனான ஏகலைவன், தனது வலது கட்டை விரலை துரோணாசரியாருக்கு அர்ப்பணித்தது.
6. தனது சீடர்களான அஸ்வத்தாமாவும், அர்ஜுனனும் சிறந்த வில்லாளிகளாக வரவேண்டும் என்று, தான் பாடம் கற்பிக்காத ஏகலைவனிடம் இருந்து வலது கட்டை விரலை குரு தக்ஷிணையாக கேட்டது.
7. பிரம்மா வேண்டுதலின் பொருட்டு விஸ்வகர்மாவால் சுந்தா, உபசுந்தா என்று நிசும்பனின் குமார்களை அழிக்க.
8. த்வைதவனத்தில் சித்ரசேனன் என்ற கந்தர்வனால் சிறைபிடிக்கப்பட்ட பின், யுதிஷ்டிரர் மூலமாக விடுவிக்கப்படுகிறான். அவமானம் தாங்காமல், தற்கொலை செய்ய முடிவு செய்கிறான். க்ரியா என்ற அரக்கி காப்பாற்றி தீமைகளை தொடர்ந்து செய்யும்படி கூறுகிறாள்.
9. 36 வருடங்களுக்கு பிறகு எனது குருவம்சம் அழிந்தது போல, யது வம்சம் அழியட்டும்.
10. கௌதம முனிவரின் மகன்; எந்த விஷயமானாலும் தீர்க்கமாக சிந்தித்து முடிவெடுப்பவன்; கௌதமர் அவரது மனைவியின் தலையை வெட்ட சொல்ல, தனது நீண்ட ஆலோசனையால், தந்தையின் ஆணையை நிறைவேற்றாமல் இருக்க, தந்தை ஆணையை திரும்ப பெறுகிறார்.



Please Renew/subscribe to MADHURAMURALI

# பாலகர்களுக்கு ஒரு கதை



## *விஸ்வாசத்தின் மேன்மை!*

ஒரு தேசத்தை சுதாமா என்கிற ஒரு நல்ல ராஜா ஆண்டு வந்தான். அவன் தனது குடிமக்களிடம் அளவற்ற கருணையும் அன்பும் கொண்டிருந்தான். தனது பிரஜைகளுக்கு என்ன கஷ்டம் என்பதை தனது சேவகர்கள் மூலமாக அவ்வப்பொழுது அறிந்து அவற்றை எல்லாம் முழுமையாக பூர்த்தி செய்வான். அவனது நாட்டில் ஒருவருக்கும் குறை என்பதே இல்லாமல் இருந்தது.

அவனது நாட்டில் எல்லா விதத்திலும் மிக நல்ல பழக்கங்களை கொண்டவனாக சுதர்மன் என்ற ஒரு சிறு பையன் வளர்ந்து வந்தான். அவன் புத்திசாலியாகவும், அறிவாளியாகவும், நல்லொழுக்கங்கள் கொண்டவனாகவும் வளர்க்கப்பட்டு இருந்தான். விதிவசத்தால் சுதர்மனின் பெற்றோர் இருவரும் அவன் சிறுவனாய் இருக்கையிலேயே இறந்து போயினர். சிறுவனாய் இருந்த போதிலும், சுதர்மன் ராஜாவை பற்றி தாய், தந்தையரிடமிருந்து நிறைய கேள்விப்பட்டு இருந்தான். அதனால் அவனுக்கு ராஜா மேல் அதீத விசுவாசமும், அதனால் தன்னை எப்படியும் ராஜா காப்பாற்றுவார் என்ற நம்பிக்கை, எப்படியோ அந்த சுதர்மனுக்கு ஏற்பட்டு இருந்தது. அதனால் பெற்றோரை இழந்த பின்னும், வாழ்க்கை பற்றி கவலைப்படாது இருந்தான் சுதர்மன். அந்த அளவிற்கு அந்த ராஜா, ராஜ்யத்தை கண்ணும் கருத்துமாய் ஆண்டு வந்தான்.

சுதர்மன் தினம் படித்து வந்த பாடசாலையில் அவனது வயது ஒத்த நண்பர்கள் அவனிடம் "ஏண்டா சுதர்மா! உன் பெற்றோர் உன்னை விட்டு போயினர். இனி உன் வாழ்க்கை என்ன ஆகும்?" என்று கவலையுடன் கேட்டனர். சுதர்மனோ "நம் நாட்டை ஆள்பவர் சுதாமா அல்லவா? அப்புறம் நாம் எப்படி அனாதை ஆவோம்? அவர் நம்மை நன்றாக பார்த்து கொள்கிறார். எனக்கு ஒரு நல்ல வழி அமைக்காமலா போவார்?" என்றான்.



Please Renew/subscribe to MADHURAMURALI

இதையே அவன் எப்பொழுதும் சிந்தித்தும் பேசியும் வந்தான்.

ராஜாவின் காதுகளை இது எட்டியது. தன் பிரஜை ஒருவன் தன் மேல் இப்படி விசுவாசம் கொண்டவனாய் இருக்கிறான் என்றவுடன் அவன் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. தனது மந்திரிகளை கூப்பிட்டு அந்த சிறுவனுக்கு என்ன செய்யலாம் என்று வினவினான். மந்திரிகளும் ராஜாவை போன்றே பிரஜைகளின் நலனையே கருத்தில் கொண்டிருந்தார்கள். அவர்கள் "மன்னா! நீங்கள் எது செய்ய நினைத்தாலும் அது நல்லதாகவே இருக்கும். ஆணையிடுங்கள். செய்து முடிக்கிறோம்" என்றனர். சுதாமாவும் "அந்த சிறுவன் வசதியாய் வாழ ஒரு வீடும், அவனுக்கு தேவையான செல்வமும் அளியுங்கள்" என்று கேட்டு கொண்டான்.

அதன்படியே மந்திரிகள் செயலாற்றினர். சுதர்மனை சேவகர்கள் நாடி, அவனுக்கென்று வீடும், செல்வமும் ராஜா அளித்ததை பற்றி தெரிவித்ததும் சுதர்மன் மட்டற்ற மகிழ்ச்சி கொண்டான். "ராஜா இப்படி ஏதாவது தானாகவே செய்வார் என்று நான் அறியாமலில்லை. அவர்தான் தாயும் தந்தையுமாய் இருக்கிறாரே" என்று கூறி களிப்பெய்தினான். இதையும் ராஜா கேள்விப்பட்டான். நாட்கள் சென்றன.

ஒருமுறை பாடசாலையில் சுதர்மனின் நண்பர்கள் அவனிடம் "சுதர்மா! நீ ராஜா கோபப்படும்படி என்ன செய்தாய்? உன் வீட்டை ராஜ சேவகர்கள் அழித்து வருகின்றனர்" என்றனர். அதை கேட்டவுடன், சுதர்மன் அதைரியமோ வருத்தமோ படவில்லை. அவன் மேலும் திண்ணமாக மகிழ்வுடன் "ஆஹா! நம் மன்னர் மேலும் ஏதோ சிறந்த நல்லதை எனக்கு செய்ய போகிறார் என்று நினைக்கிறேன். அதனாலேயே என் வீட்டை இடிக்கிறார். அவர் எதுவும் என் நன்மைக்குத்தான் செய்வார்" என்றான். அவன் நண்பர்கள் வாயடைத்து போயினர்.

அவன் இப்படி பேசியதும், ராஜ சேவகர்கள் காதுகளை எட்டியது. அவர்கள் மந்திரிகளிடம் சொல்ல, மன்னன் காதுகளையும் இது எட்டியது. மன்னன் இப்பொழுது சுதர்மன் மேல் மிக்க பிரியத்தை அடைந்தான். அவன் சொன்னான்



Please Renew/subscribe to MADHURAMURALI

"மந்திரிகளே! பாருங்கள், எனக்கோ வயதாகிறது. எனக்கு குழந்தைகளுமில்லை. இளவரசு பட்டம் ஒருவனுக்கு சூட்ட வேண்டும். என்னை கேட்டால் இந்த சுதர்மனுக்கு எல்லாவற்றையும் கற்றுக்கொடுத்து அவனுக்கு இளவரசு பட்டம் கட்டலாம் என்று நினைக்கிறேன். உங்கள் அபிப்ராயத்தை சொல்லுங்கள்" என்றான். மந்திரிகளோ அதை கேட்டு, மகிழ்ச்சி அடைந்தனர்.

சுதர்மனை கூட்டி வர சேவகர்களை அனுப்பினர். அவனிடம் சென்று சேவகர்கள் விஷயத்தை தெரிவிக்காமல் "உங்களை ராஜா கூட்டி வரச் சொன்னார்" என்றனர். உடனே சுதர்மன் பயப்படாமல் "என்ன விஷயம் என்று சொல்லுங்கள். ராஜா நன்மைக்காகத்தான் கூப்பிட்டு இருப்பார் என்று எனக்கு தெரியும். மேலும் புதிதான வீடு தருகிறாரா அல்லது விளைநிலங்களை தருகிறாரா அல்லது செல்வம் தருகிறாரா, என்ன தர போகிறார்? ஏற்கனவே அவர் என்னை சௌக்கியமாய் அல்லவா வைத்து இருக்கிறார்" என்றான். சேவகர்கள் அவனிடம் பக்குவமாய் விஷயத்தை சொல்ல, சுதர்மன் அடைந்த வியப்பிற்கும், மகிழ்ச்சிக்கும் அளவே இல்லை.

பாலகர்களே! இக்கதை ஒரு முக்கியமான விஷயத்தை அழகாக சொல்கிறது. இறைவனை அடைய விரும்பும் ஒவ்வொருவரும் இக்கதையில் வரும் சுதர்மன் போல் விசுவாசமாய் இருக்க வேண்டும். சுதாமா என்கிற ராஜா போல்தான் கடவுளும், குருவும் உள்ளனர். சுதர்மனின் விசுவாசத்தை ராஜா சேவகர்களின் மூலம் அறிகிறான். இறைவனோ, இறைவனை அடைய ஆசைப்படும் ஒருவனின் மனதிலேயே இருப்பதால், இறைவன் ஒவ்வொருவர் மனதில் இருப்பதையும் அறிந்து கொண்டு அதை பூர்த்தி செய்கிறான். ராஜா போல, இறைவனும், தன்னை முழுமையாக நம்பி இருக்கும் ஒவ்வொருவரையும் கைவிடுவதில்லை. அவனிடம் நமக்கு தேவை, விசுவாசம் மட்டுமே. ராஜா இளவரசு பட்டம் கட்டுவது போல, இறைவனும் தன்னிடம் விசுவாசமாக இருக்கும் ஒருவனின் கஷ்டங்களை நீக்கி, தனது அழியா பதத்தை அவனுக்கு நல்கிறார்.



Please Renew/subscribe to MADHURAMURALI

## சத்சங்க செய்திகள்

**ஏப்ரல் 29,30 –** பெங்களூர் ஸ்ரீசுந்தர ஆஞ்சநேயர் கோவிலில் பிரதிஷ்டா தின வைபவம், மிக சிறப்பாக ஸ்ரீஸ்வாமிஜி அவர்களின் முன்னிலையில் நடைபெற்றது. முதல் நாள் ஹோமங்களும் மறுநாள் புறப்பாடும் இடம்பெற்றன. இவ்விருநாட்களும் ஸ்ரீஸ்வாமிஜி அவர்களின் ஏழு நாட்கள் நடைபெற்ற, பக்த விஜய பூர்த்தி உபன்யாசமும் இடம் பெற்றிருந்தது.

**ஏப்ரல் 27,28 – G.O.D.** இந்தியா டிரஸ்டின் மூன்றாம் ஆண்டு விழா மிக கோலாஹலமாக, பெங்களூர் மல்லேஸ்வரத்தில் கொண்டாடப்பட்டது. இதில், ஸ்ரீஸ்வாமிஜி அவர்களும் கலந்து கொண்டு அருளுரை வழங்கினார்கள்.

**மே 1 –** கடலூர் ஸ்ரீகோதண்டராமர் ஸ்வாமி கோவில் கும்பாபிஷேகத்தில் கலந்து கொண்டு, ஸ்ரீஸ்வாமிஜி அவர்கள், "சீதா கல்யாணம்" பிரவசனம் செய்தருளினார்கள்.

**மே 4 –** ஸ்ரீஸ்வாமிஜி அவர்கள், குடியாத்தம் ஸ்ரீகருப்புலீஸ்வரர் கோவிலில் நடைபெற்ற அப்பர் விழாவில், கலந்து கொண்டு சிவனடியார்கள் சரித்திரம் குறித்து, அருளுரை வழங்கினார்கள். சுமார் 3000அன்பர்கள் இதில் கலந்து கொண்டு, குருவருளும் திருவருளும் பெற்றனர்.

**மே 5 – 14 –** மதுரபுரி ஆஸ்ரமத்தில் மிக சிறப்பாக, மாதுரி ஸகி ஸமேத ஸ்ரீப்ரேமிக வரதனுக்கு வசந்தோத்ஸவம் ஸ்ரீஸ்வாமிஜி அவர்களின் முன்னிலையில் கொண்டாடப்பட்டது. தினமும் விசேஷமான கீர்த்தனம், பூஜை, புறப்பாடு இடம்பெற்று இருந்தது. ஸ்ரீப்ரேமிக வரதன் விதம் விதமான அலங்காரத்துடன், புறப்பாடு கண்டருளினான். அனைத்து நாட்களும், கலந்து கொண்ட அன்பர்களுக்கு, ஆஸ்ரமத்தில் பிரசாதம் வழங்கப்பட்டது.

**மே 19 –** மதுரை அருகே காரியாபட்டி ஸ்ரீகிருஷ்ணர் கோவில் கும்பாபிஷேகத்தில் கலந்து கொண்டு, ஸ்ரீஸ்வாமிஜி அவர்கள் ஆழ்வார்கள் சரித்திரம் மற்றும் நாமகீர்த்தனத்தின் அவசியம் குறித்து அருளுரை வழங்கினார்கள். சுமார் 2000அன்பர்கள் இதில் கலந்து கொண்டு குருவருளும் திருவருளும் பெற்றனர். ஸ்ரீஸ்வாமிஜி அவர்கள், ஸ்ரீரங்கம் காட் கேந்திராவின் சத்சங்கம்



Please Renew/subscribe to MADHURAMURALI

ஸ்ரீரங்கம் பிள்ளையார் கோவிலருகே ஏற்பாடு செய்த நகரசங்கீர்த்தனத்தில் கலந்து கொண்டார்கள்.

**மே 23 –** சென்னை ப்ரேமிக பவனத்தில், ஸ்ரீஸ்வாமிஜி முன்னிலையில் **ஸ்ரீநரசிம்ம ஜெயந்தி** கொண்டாடப்பட்டது. ஸ்ரீஸ்வாமிஜி அவர்கள் ப்ரஹலாத சரித்திரம் உபன்யாசம் செய்தருளினார்கள்.

**வளைகுடா சத்சங்கங்கள் – ஏப் 18 – மே 3 –** ஏப்ரல் 18 முதல் மஸ்கட் மற்றும் சோஹாரில் ராமுஜி பல சத்சங்கங்களில் கலந்து கொண்டார். இவற்றில் ராமன் காட்டிய தர்மங்கள், மஹான்கள், பாகவதர்கள், பக்தர்களின் சரித்திரங்கள், பாகவத கதைகள், ருக்மிணி கல்யாணம், பாகவதத்தில் வரும் துதிகள் ஆகியன குறித்து மிக அழகாக பேசினார். அனைத்து சத்சங்கங்களிலும் மஹாமந்திர நாமகீர்த்தனம் விமரிசையாக இடம்பெற்றது.

ஏப்ரலில் சிவன் கோவில் வளாகத்தில் மஸ்கட் கோபகுடீர குழந்தைகள் ராமுஜி முன்னிலையில் ராம சரித்திரத்தை அரங்கேற்றினர். "நம்மை தேடி வந்து நலம் தரும் நாமம்" எனும் நிகழ்ச்சியில் நாம மஹிமை, சத்சங்கத்தின் இன்றியமையாமை, நாமப்பணி குறித்து அவர் பேசினார். பல இடங்களில், தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் பேசினார். கிரஹப்ரவேச நிகழ்ச்சி ஒன்றில், கோவர்த்தன மலை தூக்கிய கோவிந்தனின் சரித்திரம் பாகவதத்திலிருந்து படிக்கப்பட்டது.

ஏப்ரல் 24 அன்று, பல மஸ்கட் அன்பர்களும் குழந்தைகளும் சேர்ந்து, ராமுஜி முன்னிலையில் ஸ்ரீஸ்வாமிஜி அவர்கள் இயற்றிய கீர்த்தனங்களை - மதுரகீதம் அழகாக பாடினர். ஏப்ரல் 26 அன்று ஒரு சிறப்பு மஹாமந்திர கூட்டு பிரார்த்தனையை ராமுஜி நிகழ்த்தினார். இதில் நாமகீர்த்தனத்தின் அவசியத்தையும் அது எப்படி பகவானின் அருளை பெற்று தருகிறது என்பது குறித்தும் பேசினார். சத்சங்க அன்பர்கள் தங்களுக்கு ஏற்பட்ட நாமானுபவங்களையும் பகிர்ந்து கொண்டனர்.

ஏப்ரல் 26 முதல் ஸ்ரீகிருஷ்ணர் கோவிலில் பாகவத சப்தாஹம் நடைபெற்றது. ஸ்ரீஸ்வாமிஜி அவர்கள் "கொண்டாடு



Please Renew/subscribe to MADHURAMURALI

பண்பாடு .." என்ற தமது கீர்த்தனத்தில் குறிப்பிட்டுள்ளபடியே தீபம், திராவிட கீதம், நாதகீதம், குழந்தைகளின் கோலாட்டம், ஸ்ரீஸ்வாமிஜி அவர்களின் கீர்த்தனம் ஆகியன சேர்த்து ஒரு அற்புதமான பாகவத புறப்பாடும் இடம்பெற்றது. இந்த வைபவத்தில் ஸ்ரீஸ்வாமிஜி அவர்கள் அனுப்பி இருந்த நீல வஸ்திரத்தால் ஸ்ரீப்ரேமிகவரதன் அலங்கரிக்கப்பட்டு இருந்தான். ஒரு மனிதனை ஆன்மீகத்தில் உயர செய்யும் சத்குரு, சாஸ்திரம், பகவான் மூன்றும் இப்புறப்பாட்டில் பங்கேற்றது விசேஷம் என ராமுஜி பின்னர் பேசுகையில் குறிப்பிட்டார். 56 பிரசாத வகைகள் அன்று ஸ்ரீப்ரேமிகவரதனுக்கு நிவேதனம் செய்யப்பட்டது. ராமுஜி பாகவத பிரவசனம் செய்தார். தினம் பாகவத பாராயணம் இடம்பெற்றது. மஹாமந்திர கூட்டு பிரார்த்தனையின் பொழுதும், பாகவத புறப்பாட்டின் பொழுதும், பகவான் வான்மழை பொழிந்தான் என்பது குறிப்பிட வேண்டிய ஒன்று.

ஏப்ரல் 27 முதல் மே 3 வரை துபாய் மற்றும் அபுதாபியில் பாகவத தர்ம அனுபவம் குறித்த பல சத்சங்கங்களில் கலந்து கொண்டு ராமுஜி பிரவசனம் செய்தார். மே 5 முதல் 9 வரை ராமுஜியின் வருகை முன்னிட்டு, மனாமாவில் தொடர்ந்து சத்சங்கங்களை நடத்தி வரும் அன்பர்கள் பல இடங்களில் ஸ்ரீமத் பாகவத சத்சங்கங்களுக்கு ஏற்பாடு செய்திருந்தனர். இவற்றில் ராமுஜி கலந்து கொண்டு உபன்யாசம் செய்தார். தினம் திரளான அன்பர்கள் வந்திருந்தனர்.



**ஆஸ்திரேலிய சத்சங்கங்கள்** – ஸ்ரீஸ்வாமிஜி அவர்களின் பூரண அருளாசிகளுடன் ஸ்ரீசைதன்ய மஹாப்ரபுவின் ஜெயந்தி தினமான ஏப்ரல் 23 அன்று பூர்ணிமாஜியின் ஆஸ்திரேலிய சத்சங்கங்கள் துவங்கின. ஸ்வாமி ஹரிதாஸ் மற்றும் சைதன்யரை பற்றி ஒரு இல்ல சத்சங்கத்தில் பூர்ணிமாஜி பேசினார். 25,26 தேதிகளில் ஸ்ரீராம்கிருஷ்ண மந்திர் சிட்னியில் மஹாமந்திர கீர்த்தனம், ஹனுமான் சாலீசா, ராமாயணத்தில் உள்ள ரசமான



Please Renew/subscribe to MADHURAMURALI

விஷயங்களுடன், ஹனுமான் எப்பேர்ப்பட்ட குணவான் என்பது குறித்து பூர்ணிமாஜி பேசினார். இதில் 150க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர். 27 அன்று சுந்தரம் ஆஸ்ரம சத்சங்கத்தில் பூர்ணிமாஜி சபரி சரித்திரம் குறித்து, உபன்யாசம் செய்கையில் சத்சங்கத்தின் மேன்மையை எடுத்துரைத்தார். 28 அன்று க்ரெஸ்ட்வுட் சிட்னியில் ஒரு சத்சங்கத்தில் பாகவத தர்மம் குறித்து பேசினார். சொர்ரிப்ரூக் சிட்னியில் உள்ள மாதுரி ஸகீ ஸமேத ஸ்ரீப்ரேமிக வரதனின் சன்னதியில் பாகவதத்தில் உள்ள துதிகளை பற்றி பூர்ணிமாஜி மே 5-8 வரை அழகாக பேசினார். மே 10 அன்று சிட்னி சக்தி கோவிலில் பாகவத தர்மத்தின் சாரத்தை பற்றி பேசினார். இந்த சத்சங்கங்களில் கலந்து கொண்ட பலர், மஹாமந்திர கீர்த்தனத்தை இனி தொடர்ந்து செய்வோம் என்று உறுதி எடுத்து கொண்டது குறிப்பிடப்பட வேண்டியது. மே 11 அன்று கேன்பெரா ஹிந்து கோவில் மற்றும் கலாசார மையத்தில் குழந்தைகளின் கீர்த்தனை மற்றும் பஜனைகள் இடம் பெற்றன. சனாதன தர்மத்தின் உயர்வையும், பாகவத தர்மம் காட்டும் வாழ்க்கையின் உன்னத லட்சியத்தையும், நாமகீர்த்தனத்தின் அவசியத்தையும் பூர்ணிமாஜி அழகாக விளக்கினார். மே 15 சங்கர ஜெயந்தி அன்று பூர்ணிமாஜி, பக்தி, ஞான மார்க்கங்கள் வழியாக மக்கள் உய்வதற்காக, ஸ்ரீசங்கரர் செய்திருக்கும் அபார காரியங்களை பற்றி எடுத்து பேசினார்.

## கோவில்பட்டியில் சத்சங்கம்

கோவில்பட்டி நாமத்வாரின் ஆண்டுவிழாவை ஒட்டி அங்கு ஒரு அகண்ட நாமம் மே 16 அன்று ஏற்பாடு செய்யப்பட்டு இருந்தது. அதில் கலந்து கொள்ள குருநாதர் ஆக்ஞைப்படி ராமுஜி சென்றிருந்தார். நாமத்வாரில் குருநாதருக்கு பூஜை செய்கையில் "நாமகீர்த்தனம் செய்து குருநாதரிடம் பிரார்த்தனை செய்தால் எதுதான் நடக்காது? உங்கள் பிரார்த்தனை எதுவானாலும் கேட்கவும்" என்றார். ஒரு பெண்மணி எழுந்து "மழைதான் முக்கிய தேவை. அதுதான் வேண்டும்" என்றார். அப்படியே பிரார்த்தனையுடன் கீர்த்தனை நடந்து முடிந்தது. மறுநாள் கோவில்பட்டியில் மழை பொழிந்து தள்ளியது. அதுதான் சீசனிற்கான முதல் மழையே!.



Please Renew/subscribe to MADHURAMURALI

# *ப்ருந்தாவனமும் நந்தகுமாரனும்*

*- ஜனனி*

## ஸ்ரீஹம்ஸதாஸ் பாபாஜி மற்றும் ஸ்ரீகோபாலீபாயி -6



பாகவதத்தை மனப்பாடம் செய்ய வேண்டும் என்று பாபா ஹம்ஸதாஸ்ஜி ஸ்ரீராதையிடம் ப்ரார்த்தனை செய்யலானார். ஸ்ரீராதை அவர் நாவில் எழுதினாள். அப்பொழுதிருந்து அவருக்கு பாகவதம் கண்டஸ்தமாகி விட்டது. பாபா ஹம்ஸதாஸ்ஜி, பண்டித ராமக்ருஷ்ணதாஸ் பாபாவிடமிருந்து வ்யாகரண சாஸ்திரம் பயின்றார். பின், குருநாதரின் ஆக்ஞையின் பேரில், அவர் பாகவதம் மற்றும் பக்தமால் ஆகியவற்றின் உபந்யாஸம் செய்யலானார்.

அவருடைய உபந்யாஸங்கள் மிகவும் ரஸமயமாக இருக்கும். பாகவதத்தை ஸப்தாஹமாகவும் அவர் உபந்யாஸம் செய்வார். ஆனால் அவர் ஸப்தாஹம் எங்கு செய்தாலும், அதை ஏற்பாடு செய்பவர்களிடம் ஒரு நிபந்தனையிடுவார். அது கதையை நியமமாக கேட்பவர் அனைவருக்கும் கதையின் முடிவில் வயிறார உணவு அளிக்க வேண்டுமென்பதே! கதையில் வரும் சம்பாவனையை அவர் ஸாதுக்களுக்கே அளித்து விடுவார். தான் பணத்தை கையாலும் தொடமாட்டார். பரமஹம்ஸ வ்ருத்தியிலேயே இருப்பார்.

குருதேவர் நடத்தி வந்த ஸ்ரீநிம்பார்க்கா ஆசார்யரின் உத்ஸவத்தை அவர் விமரிசையாக நடத்துவார். திக்விஜயீ ஸ்ரீகேஸவ கஷ்மீரியினுடைய உத்ஸவத்தை அவர் தானே நடத்தினார். இந்த உத்ஸவங்களை நடத்த அவர் பர்ஸானாவிலிருந்து வெறும் கையுடனேயே வருவார். ஆனால் அவர் வந்தவுடன் எல்லா சாமான்களும் ஆட்களும் தானே சேர்ந்து விடுவார்கள். உத்ஸவங்கள் முடிவடைந்ததும், அவர் வந்ததுபோலவே வெறும் கையுடனேயே திரும்புவார். எல்லோரிடமும் ப்ரேமையுடன் வ்யவஹாரம் செய்வார். எல்லோருக்கும் பாபாவிற்கு தன்னிடம் உள்ளது போல் ப்ரேமை, வேறெவரிடமும் இல்லை என்றே



Please Renew/subscribe to MADHURAMURALI

தோன்றும். மனிதர்களிடம் அன்பு செலுத்துவது போல், அவர் மிருகங்களிடமும், பக்ஷிகளிடமும் அன்பு செலுத்துவார்.

விலாஸ் கட் எனும் இடத்தில் ஒரு பெரிய பாம்பு வாழ்ந்து வந்தது. மத்தியான வேளைகளில் பாபா குகையிலிருந்து வெளியே வந்து இளைப்பாறும் பொழுது அந்த பாம்பும் வெளியே வந்து, அவருடைய ஸான்னித்யத்தின் சுகத்தை அனுபவிக்கும். சில சமயங்களில் அவரது சரணத்தை நக்கும். அவருடைய இளம் சிஷ்யரான ஸ்ரீவம்ஸீதாஸ்ஜீ இதை கண்டு பயத்தில் நடுங்குவார். ஒருநாள் அவர், அதனுடைய புற்றின் வாயில் கல்லை வைத்து அடைத்துவிட்டார். மறுநாள் பாம்பை காணவில்லை. பாபா கேட்டார், "இன்று நாகராஜர் வரவில்லையா?". ஒருவர், "வம்ஸீதாஸ் அவர் புற்றில் கல் வைத்து அடைத்து விட்டார்" என்று கூறினார். கோபத்துடன் பாபா, "இவ்வாறு செய்யலாகாது என்று வம்ஸீயிடம் கூறு. நாம் நாகராஜரின் இல்லத்தில் வசிக்கிறோம். அவர் நமது வீட்டிலல்ல!" என்று கூறினார்.

பாபா மானஸ ஸேவையில் சித்தராகியிருந்தார். பல முறை அவர் தன் குகையில் த்யானத்திலிருக்கும் பொழுது, ராதையின் கோயிலில் அளிக்கப்படும் நைவேத்தியத்தை அறிந்துவிடுவார். ஒரு முறை அவர் ஸ்ரீராதைக்காக உடை ஒன்று தயார் செய்தார். அதை எடுத்துக்கொண்டு கோவிலுக்குச் சென்றார். ஸாங்கரீ கோர் எனும் இடத்தின் அருகில் வந்ததும், ஒரு எட்டு வயது பெண் அவரை நோக்கி வந்தாள்.

அந்த உடைகளை ஆசையுடன் பார்த்தவாறே அவள், "பாபா, இந்த உடையை எங்கே எடுத்து செல்கிறீர்கள்? எனக்குக் கொடுங்களேன்" என்றாள். இதை கூறியபடியே, உடையை அவர் கையிலிருந்து எடுத்துக்கொண்டு போயே விட்டாள் அச்சிறுமி. பாபாவும் பார்த்துக் கொண்டே இருந்துவிட்டார். ஆனால், அந்த பெண்ணின் ஸ்பர்ஸ மாத்திரத்தில், அவரது ஒவ்வொரு அங்கத்திலும் ஆனந்தத்தின் அலைகள் தாக்கின.

பாவாவேசத்தில் தள்ளாடியபடியே, அவர் ஸ்ரீஜீயின் கோயிலைச் சென்றடைந்தார். அந்த உடையையே ராதை தரித்திருப்பதைக் கண்டு விக்கித்து நின்றார் !

(தொடரும்)



Please Renew/subscribe to MADHURAMURALI



# மாலே மணிவண்ணா – 118

–மகாவித்துவான்
மயிலம். வே. சிவசுப்பிரமணியன்

இறைவன், அருளும் ஆற்றலும் உடையவனாக கூற பெறுகிறான். சைவ சமயத்தில் ஆற்றலை சிவமாகவும், அருளை சக்தியாகவும் கூறி, இருவரும் தம்முள் பிரிப்பில்லாதவர் என்று சொல்வதும் இங்கு கருதுதல் நலம் தரும். இதனை புறநானூறு

*கடல்வளர் புரிவளை புரையும் மேனி*
*அடல் வெந் நாஞ்சில் பனைக்கொடியோனும்*
*மண்ணுறு திருமணி புரையும் மேனி*
*விண்ணுறு புட்கொடி விறல் வெய்யோனும் என*
*ஞாலம் காக்கும் கால முன்பின்*
*தோலா நல்லிசை நால்வர் உள்ளும்*

என்று குறிப்பிடும். நால்வர் என்பதில் சிவபிரானையும் முருகனையும் இணைத்து காட்டும் புறநானூறு.

வரம்பிலா ஆற்றலுடைய சிவபிரான், வரம்பிலா அருள் உடைய முருகன் என்ற இருவரும் ஒருவர் ஒருவரின் வேறல்லர் என்பதை

"*ஆதலின் நமது சத்தி ஆறுமுகன் அவனும் யாமும்*
*பேதகம் அன்றால் நம்போல் பிரிவிலன் யாண்டும் நின்றான்*
*ஏசனே அவன் ஆடலான் மதலை ஆயினன் காண்*
*பேசில் ஆங்கவன் பரனோடு பேதகன் அல்லன்*" என்ற கந்த புராண செய்யுள் கொண்டு அறியலாம்.

பிரிப்பின்றி இயங்கும் கண்ண, பலராமர்களது தன்மையை விளக்கப் பரிபாடல் "புல்லிய சொல்லும் பொருளும் போலவும்" என்று அரிய உவமை வகுத்து காட்டியது. சொல்லும் பொருளும் பேதா பேத நிலைக்கு உவமையாக சாத்திரங்களில் கூற பெறுவது. ஒன்றை ஒன்று தாங்கி நிற்பது. சொல் வேறு பொருள் வேறு என்றாலும், சொல்லை சொன்னவுடன், சொல்லையும்



Please Renew/subscribe to MADHURAMURALI

எழுத்துக்களையும் நினையாமல், கேட்பான் பொருளையே நினைத்தல் கண்டால், இரண்டுக்கும் உள்ள ஒற்றுமையை உணரலாம்.

சத்திக்கும், சிவத்துக்கும் உள்ள ஒற்றுமையை இதே உவமையை கொண்டு அபிராமி பட்டர் தம் அந்தாதியில் கூறுகிறார்.

"*சொல்லும் பொருளும் என நடமாடும் துணைவருடன்*
*புல்லும் பரிமளப் பூங்கொடியே*" என்பது அவர் வாக்கு.

சிவன், முருகன், திருமால், பலதேவன் என்ற நாற் பெருங்கடவுள் வழிபாடு சங்ககால வழிபாடாக இருந்தமையை புறநானூறு கொண்டு அறிகிறோம்.

ஆப்கானிஸ்தானத்தை தாண்டி வடமேற்கில் காணுவம் என்ற இடத்தில் கிடைத்த இரண்டு காசுகள் "பழைய பாக்ஷியா" என்று அக்காசுகளுக்கு பெயர். சதுர வடிவம். கிரேக்க மொழி. சமஸ்கிருத சொற்கள் உள்ளன. கி.மு.180க்கு முற்பட்டது. அகதாத்லியன் அரசன். ஒரு காசின் ஒரு பக்கம் சிவனின் சூலம்; மறுபக்கம் முருகனின் வேல். இன்னொரு காசின் ஒரு பக்கம் பலராமன் - கலப்பை, மறுபக்கம் கண்ணன் - சக்கரம் என்று அக்காசுகள் உள்ளன. கண்ணன் - பலராமன் ஒரு காசிலும் சிவன், முருகன் இன்னொரு காசிலும் உள்ளமை இருபெருஞ்சமயங்களின் வரலாற்று தொன்மையை காட்டி நிற்கின்றன எனலாம்.

எனவே சொல்லும் பொருளும் போல என்பது பரிபாடலில் வருவதும், அபிராமி அந்தாதியில் வருவதும் ஒன்றாகி ஓத உணரத்தக்கதாகும்.

இதுகாறும் கூறியவற்றால் திருமால் வழிபாடு கண்ணன் (மாயோன்) பலதேவன் என்று இரண்டு வகையாக வழிபடப்பெற்றது. ஆனாலும் தோற்றத்தில் இருவர் ஆயினும், சொல்லும் பொருளும் போல இருவரும் ஒருவரே என்று பரிபாடல் காட்டுகிறது. மாயோனையும் அவன் முன்னோனாகிய பலராமனையும் தாங்கி நிற்கின்ற நீண்ட நிலைமையினை உடைய புகழான் உயர்ந்த இருங்குன்றம் சிறந்தது.

(தொடரும்)



Please Renew/subscribe to MADHURAMURALI

# அப்பாலுக்கு அப்பால்



## வந்தார் அல்லமப்ரபு!

அல்லமப்ரபு சித்தாராமருடன் ஸ்ரீசைலத்திலிருந்து கிளம்பி கல்யாணுக்கு வந்து கொண்டிருந்தார். வரும் வழியில் எல்லாம் பசவரின் புகழையே பேசி கொண்டிருந்தார் அல்லமர். சித்தாராமருக்கு அதனால் பசவரின் மேல் உயர்ந்த எண்ணம் வந்தது. அவ்வப்பொழுது பேசுகையில் எல்லாம் "எல்லோரும் பொருள், உலகம், மோகம் எல்லாம் மாயை என்கின்றனர். ஆனால் மனம் அல்லவா மாயை?" என்பது போன்றே பேசி வந்தார். இருவரும் சன்யாச கோலத்தில் பசவரின் வீட்டு வாசலை வந்தடைந்தனர்.

அப்பண்ணா என்னும் அடியார் வந்து இருவரையும் உள்ளே அழைத்தார். அல்லமர் நகரவில்லை. உள்ளே போக யத்தனித்த சித்தாராமர், அல்லமர் உள்ளே செல்ல இஷ்டப்படவில்லை என்றவுடன், அமைதியாய் இருந்து விட்டார். அல்லமர் கொஞ்சம் கண்டிப்பான குரலுடன் "போய் பசவரிடம் இரு அடியார்கள் வந்திருக்கின்றனர் என்று சொல்லுங்கள்" என்றார்.

அப்பண்ணா, அல்லமரின் குரலை பார்த்து பயந்தவாறே ஓடோடி போய் பசவரிடம் விவரம் தெரிவித்தார். பசவர் கரதலத்தில் லிங்கத்தை வைத்து கொண்டு பூஜையில் மெய்மறந்திருந்தார். அப்பண்ணா சொன்னதை கேட்டு "பரமனுக்கும் அடியாருக்கும் வித்யாசம் இல்லை. நான் சிவபூஜை செய்வதை பாதியில் நிறுத்த வேண்டாம். நீ என் சார்பில் போய் மரியாதையாய் அழைத்து வா" என்றார்.

அதை கேட்ட அல்லமர் கோபத்துடன் "கரதலத்தில் வைத்து பூஜை செய்யும் ஒருவர் எப்படி எல்லாம் ஒன்று என்று பேசுவார்? இதுதான் உங்கள் பசவரின் லக்ஷணமா? நான் உள்ளே வரவே மாட்டேன்" என்றார். மறுபடியும் அப்பண்ணா ஓடி போய் சொல்ல பசவர் "இது என்ன விளையாட்டு? இது அடியவரின்



Please Renew/subscribe to MADHURAMURALI

வீடு. அவர்கள் தங்கள் வீட்டிற்குள் வர அழைப்பு தேவையா என்ன?. உங்கள் வீடு என்று சொல்லி அழை" என்றார்.

அல்லமர் அசைந்து கொடுக்கவே இல்லை. "எனக்கு முன்பே தெரியும். உண்மையான அடியவர்களுக்கு மரியாதை இங்கு இல்லை என்று. ஆண்டவனை பூஜிக்கும் முன் அடியவரை வணங்க வேண்டும் என்று பசவருக்கு தெரியவில்லையா?" என்று சப்தம் போட்டார். சித்தாராமர் குழம்பினார். வரும் வழியில் எல்லாம் பசவரை கொண்டாடியவர் இதே அல்லமர்தானே?

அதற்குள் பசவரின் அக்காள் மகன் சென்னபசவர் வந்து ஒரு நொடியில் வந்திருப்பவர் அல்லமர் என்பதை புரிந்து கொண்டார். மரியாதையுடன் வணங்கி "ஒரு நிமிடம் பொறுங்கள். மாமாவை அழைத்து வருகிறேன்" என்று ஓடோடி போய் விவரம் சொல்லி பசவரை அழைத்து வந்தார். பசவருக்கும் அவர் கைகளில் இருந்த லிங்கம் மறைந்து, அங்கு அல்லமரின் திவ்ய ஸ்வரூபம் தெரிந்தது. அல்லமர் என்றவுடன், பசவரும் மறுகணம் தயங்காமல் ஓடி வந்தார். அல்லமரின் கால்களில் விழுந்தார். அல்லமர் அதை கவனித்தாற் போலவே காட்டி கொள்ளவில்லை.

"காக்க வைத்த அபராதத்தை மன்னிக்க வேண்டும். சிவ பூஜை செய்து கொண்டிருந்தேன். அதனால்.. " என்று பசவர் சொல்ல சொல்லவே அல்லமர் "அடியவரை மறந்து விட்டு, பெருமைக்கும் டாம்பீகத்துக்குமாக ஆண்டவனை பூஜிப்பவரை நாம் மதிக்க மாட்டோம்" என்று மிடுக்குடன் பேசினார். "அய்ய! நான் பெரிய அபராதி. மறுபடி இப்படி நிகழாது. நீங்கள் கருணை கடலல்லவா? சிறுவனான என் தவறை மன்னித்தருள வேண்டும்" என்றார் பசவர். மற்றவரும் இப்படியே பேச, அல்லமர் அரைக்கண்ணால் சித்தாராமரை பார்த்து "பார் இவர்கள் வேஷத்தை! ஒன்று சொல்கிறார்கள். மற்றொன்று செய்கிறார்கள்" என்று விஷமத்துடன் சிரித்தார். இது ப்ரபுவின் நாடகம் என்று சித்தாராமருக்கு புரிந்தது. சட்டென அல்லமர் பசவரை இழுத்து "நீ யார் என்று எனக்குத் தெரியாதா? உன் பக்தி நான் அறியாததா என்ன" என ஆர தழுவி கொண்டார். அல்லமர் முகத்திலும் கண்களிலும் மின்னல் போன்ற சிரிப்பு. பசவர் கண்களில் ஆனந்த கண்ணீர் தெரிந்தது.

(தொடரும்)



Please Renew/subscribe to MADHURAMURALI

"மதுரமுரளி" ஆண்டு சந்தா ரூ 120
For Details: **+91-44-24895875**

"மதுரமுரளி" மாத இதழ் சந்தா அனுப்ப முகவரி:

Guruji Sri Muralidhara Swamigal Mission, 51, 7th Avenue, Ashok Nagar, Chennai - 83 .
உள்ளூர் காசோலை / நேரில் ரொக்கம் / **D.D.** in name of **Guruji Sri Muralidhara Swamigal Mission** / மணியார்டர் ஏற்றுக்கொள்ளப்படும்.

கொரியரில் பெற விரும்புவோர் கொரியர் செலவை தனியாக செலுத்தி பெறலாம்.

***ஏற்கனவே சந்தாதாரராக இருப்பவர்கள் தங்களது சந்தாவை புதுப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.***


* Publisher : S.Srinivasan on behalf of Guruji Sri Muralidhara Swamigal Mission


* Copyright of articles published in Madhuramurali is reserved. No part of this magazine may be reproduced, reprinted or utilised in any form without permission in writing from the publisher of Madhuramurali.
* Views expressed in articles are those of the respective Authors and do not reflect the views of the Magazine.
* Advertisements in Madhuramurali are invited.


| ஸ்ரீஸ்வாமிஜியின் நிகழ்ச்சிகள் | |
|---|---|
| ஏகாதசி | ஜூன் 4,19 ஜூலை 4,19 |
| மே 28 | கோபகுடீரம் ஆண்டு விழா சென்னை |
| ஜூன் 9 | புவனேஸ்வரி அம்மன் கோவில் வார்ஷிக உத்ஸவம் |
| ஜூன் 12 | சிறுபாக்கம் கோவில் சம்ப்ரோக்ஷணம் |
| ஜூன் 17 | உடுமலைப்பேட்டை கரிவரதராஜ பெருமாள் கோவில் கும்பாபிஷேகம் |


ஸ்ரீஸ்வாமிஜி அவர்களுக்குத் தெரிவிக்க வேண்டிய விஷயங்களை
Dr.A.BHAGYANATHAN, Personal Secretary to
**HIS HOLINESS SRI SRI MURALIDHARA SWAMIJI**
New No. 51, Old No. 24, 7th Avenue, Ashok Nagar, Chennai - 83.
Tel. : +9144-2489 5875, Email : contact@namadwaar.org என்னும் முகவரிக்கு அனுப்பவும்.





Please Renew/subscribe to MADHURAMURALI